விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 06 வியாழக்கிழமை (23.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

## இலங்கைக்கு ஆயுதம் வழங்க இந்தியா திட்டம்

### அமைச்சருடனான சந்திப்பில் இணக்கம்

(புதுடில்லி)

**இலங்கை இராணுவத்துக்கு பயிற்சிகளையும் ஆயுத தளபாடங்களையும் வழங்க இந்தியா திட்டமிட்டுள்ளதாக இந்திய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையுடனும் மாலைதீவுடனும் பாதுகாப்பு உறவுகளை இந்தியா மேலும் வலுப்படுத்தவுள்ளதாகவும் இரு நாட்டு இராணுவங்களுக்கும் பயிற்சியையும் ஆயுத தளபாடங்களையும் வழங்கி அவற்றின திறனை மேலும் அதிகரிப்பதற்கு உதவப் போவதாகவும் இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் கடந்த திங்கட்கிழமை இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெட்லி இரு தரப்பு பாதுகாப்பு உறவுகளை மேம்படுததுவது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட அதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் முகமட்

20ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் நீதியரசர் மீது பொது பல சேனா பாய்ச்சல்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவை நாடு கடத்த வேண்டுமென பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கிருலப்பனை போதி தர்ம மத்திய நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் எதிர்க்கட்சிகள் பலவீனமடைந்து இல்லாமல் போனதற்கு சரத் என் சில்வா வழங்கிய தீர்ப்பே காரணமாகும். கட்சித் தாவலை நியாயப்படுத்தி சரத் என் சில்வா தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருக்காவிட்டால் இன்று வலுவான ஓர் எதிர்க்கட்சி இருந்திருக்கும்.

இவ்வாறான ஓர் நபர் 19-ம் திருத்தச் சட்டத்தை உருவாக்குவது எந்தளவிற்கு நியாயமானது.

அவ்வாறு புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கும் தார்மீக பொறுப்பும் சரத் என். சில்வாவிற்கு கிடையாது.

20ஆம் பக்கம் பார்க்க

## வெளிவிவகாரச் செயலருக்கு புலிகளுடன் தொடர்பு!

### மறுக்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா செனவிரத்னவுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருப்பதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மறுத்துள்ளார்.

ஐரோப்பிய நீதிமன்றத்தில் புலிகள் மீதான தடை நீக்கம் செய்யப்பட்டிருக்கும் நிலையில், இலங்கை அரசாங்கம் அதற்கு உதவியதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.

இந்தநிலையில், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியதாக ஜே.வி.பி குற்றம சாட்டியுள்ளது.

ஜெனிவாவின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடக் காரியாலய புனரநிர்மாணப் பணிகளுக்கான கொந்தராத்தை விடுதலைப் புலிகளது நிறுவனமொன்றுக்கு வழங்கியதாகவே ஷேனுகா செனவிரத்ன மீது குற்றம

20ஆம் பக்கம் பார்க்க

O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கொழும்பு கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## இலங்கை கடற்படைத் தளபதி இந்தியாவுக்குப் பயணம்!

(கொழும்பு)

இலங்கையின் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளமையை தமிழக கட்சிகள் கண்டித்துள்ளன.

சீனா, இந்து சமுத்திரத்தில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை தடுக்கும் முகமாகவே இந்தியா, இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்தி வருகிறது.

இந்தநிலையிலேயே இன்று ஜெயந்த பெரேரா இந்தியாவுக்கு செல்லவுள்ளார்.

இந்தியாவின் உதவிகளை

20ஆம் பக்கம் பார்க்க



தீபாவளி திருநாளை முன்னிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு ஆசி வேண்டி வழிபாட்டு நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற வேளை...

## புலிகள் மீது தடை விதிக்க வேண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்குமாறு கோரி நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளுக்கு எதிரான தடை மீளவும் அமுல்படுத்தப்பட வேண்டுமெனக் கோரி ஏகமனதாக நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த தீர்மானம் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றிற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும்.

நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைய ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கியுள்ளது.

இந்த தடை நீக்கமானது இலங்கையின் பௌதிக ஒருமைப்பாடு, சுயாதீனத்தன்மை, இறையாண்மை போன்றவற்றுக்கு பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்பட்டமை குறித்து விசேட நாடாளுமன்ற அமர்வுகளை நடத்தி, தீர்மானம் நிறைவேற்றப்பட வேணடும் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சஜித் பிரேமதாச நாடாளுமன்றில் யோசனை ஒன்றை முன்மொழிந்தார், அதனை கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற

20ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் சொத்தை பெற கே.பிக்கு உரிமை உண்டு

### மங்கள சமரவீர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீக்கத்தை மகிந்த ராஜபக்ஷக்கள் பூரணமாக பயன்படுத்திக்கொள்வர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தடை நீக்கத்தின் பூரண நலன்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும், சுற்றத்தவர்களுமே நன்மை அடைவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரணடைந்த தமிழீழ விடுதலைப புலித் தலைவர்களின் ஊடாக முடக்கப்பட்ட புலிகளின் சொத்துக்களை மீளப்பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீக்கத்தின் ஊடாக அரசாங்கமே முழுமையான அளவில் நன்மைகளைப் பெற்றுக்கொளளும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க

## டிசம்பர் 9 இல் சா/த பரீட்சை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, இவ்வருடம் டிசம்பர மாதம் 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. எம். என்.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை பரீட்சைக்கு 5இலட்சத்து 77 ஆயிரத்து084 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என்றும் பரீட்சை நேர அட்டவணையில் இனி எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது எனவும் அவர் மேலும் கூறினார்.

## ஜனாதிபதி - ஹெல உறுமய சந்திப்பு தோல்வியில்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் 15 நிமிட நேரமே இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லையென்றும், ஜனாதிபதி இதன்போது கடும் சினத்தோடு இருந்ததாகவும் ஹெல உறுமய கட்சியின் உள்ளக தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருப்பதால் ஹெல உறுமயுடன் எதுவித உடன்படிக்கை செய்வதற்கு தற்போது நேரமில்லை எனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, அரசாங்கத்துக்கு முதன் முதலில் சவால் விடுத்தவர் ரத்ன ஹிமியே என்று கடும் கோபத்தோடு குற்றம் சாட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு, தமது யோசனைகளை

20ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நவிக்கு மாகாண உறுப்பினர்கள் கடிதம் சட்டமா அதிபருக்கு நோட்டீஸ்!

ஐக்கிய நாடுகள் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு கடிதம் எழுதிய வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள சட்ட மா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதி மன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளது.

சட்டமா அதிபரை, ஒக்டோபர் 30ஆம் திகதி வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தில் கையொப்பமிட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கு எதிராக தண்டனை சட்டக்கோவையை செயற்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்குமாறு, பொலிஸ் மா அதிபருக்கும் சட்டமா அதிபருக்கும் நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்கவேண்டும் எனக்கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆணைகோரும் மனுவை நுகேகொடையைச்சேர்ந்த பி.ஜி. ரவீந்திரா நிரோஷன் என்பவர் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நீதியரசர்களான விஜித் கே மலல்கொட (தலைவர்) மற்றும் ஏ.எச்.எம்.டீ. நவாஸ் ஆகியோர் கொண்ட குழு நேற்று செவ்வாய்க்கிழமை பரிசீலனைக்கு எடுத்ததன் பின்னரே மேற்கண்ட அறிவித்தலை பிறப்பித்தது.

இலங்கையிலுள்ள இனக்குழுக்களுக்கிடையில் குறிப்பாக சிங்களவர் மற்றும் தமிழர் இடையில் காழ்ப்புணர்வு, முரண்பாடு மற்றும் அமைதியின்மை என்பவற்றை தோற்றுவிக்கக்கூடிய கூற்றுக்கள் இந்த கடிதத்தில் உள்ளதென மனுதாரர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொலிஸ் மா அதிபரும் சட்டமா அதிபரும் இந்த மாகாண சபை உறுப்பினர்கள் மீது விசாரணை நடத்தவும் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று முறையிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர்கள் பொலிஸ் மா அதிபரும் சட்டமா அதிபரும் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் 33 பேரையும் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீது, அவரது அலுவலகம், விசாரணை நடத்த வேண்டும் எனவும் அந்த விசாரணையின் போது யுத்தம் தொடருவதற்கு முன்னர் நடந்த சம்பவங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டுமெனவும் கோரி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளைச் சேர்ந்த 33 உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளைக்கு, ஓகஸ்ட் முதல் வாரத்தில் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தனர்.

தமிழ்மக்களுக்கு எதிராக சகல அட்டூழியங்களையும் ஆராய்ந்து இனவொழிப்பு இடம்பெற்றதா என ஆராய வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் விசாரணைஅணியினரை இந்த 33 பேரும் கடிதம் மூலம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பாக். அகதிகள் மீது தாக்குதல்!

பாகிஸ்தான் அகதிகள் மீது நீர்கொழும்பு பகுதியில் இலங்கை கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியதில் 9 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரும் வகையில் நீர்கொழும்புப் பகுதியில் தங்கியிருந்த பாகிஸ்தானியர்களுக்கும் இலங்கையைச் சேர்ந்த கும்பல் ஒன்றுக்கும் இடையில் நேற்று புதன்கிழமை தகராறு ஏற்பட்டது என்றும், இதில் பாகிஸ்தானியர்கள் 9 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும், தாக்குதலை நடத்திய கும்பல் தப்பியோடிய நிலையில் அவர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (எ-11)

# வருமாறு அழைப்பு வந்தது இன்னமும் தீர்மானிக்கவில்லை

## முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சரை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தியா செல்வது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள சொற்பொழிவு ஒன்றிற்கு வருமாறு மனித உரிமை அமைப்பு கடந்தவாரம் அழைப்பு விடுத்துள்ளது.

எனினும் இந்தியா செல்வது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று முதலமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் தலைவர் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குழு இந்தியா சென்றதுடன், பல்வேறு தரப்பினரையும் சந்தித்து இருந்ததுடன் பிரதமர் மோடியையும் சந்தித்து இருந்தனர்.

இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்திக்க மோடி விருப்பம் தெரிவித்திருந்தார்.

எனவே விரைவில் இருவரது சந்திப்பும் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

# ஐரோப்பிய நீதிமன்றில் ரணில் செல்வாக்கானவரா?

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் விஜயத்துக்கும் விடுதலைப்புலிகளின் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியமைக்கும் தொடர்பில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதியன்று ஐரோப்பிய பொது நீதிமன்றம் 2006ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் தடையை நீக்கியது இந்த நிலையில் குறித்த தீர்ப்புக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பிருப்பதாக சில ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

அத்துடன் இலங்கையர்கள் சிலருடன் ரணில் நிற்கும் படமும் பிரசுரிக்கப்பட்டது.

இந்தப்படத்தில் காணப்படுபவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் லண்டன் பிரதிநிதிகள் என்று எரான் விக்கிரமரத்ன குறிப்பிட்டார்.

இதேவேளை ஒரு சிறிய நாட்டின் எதிர்க்கட்சி தலைவரால் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற தீர்ப்பில் செல்வாக்கு செலுத்தமுடியும் என்று அரசாங்கம் கூறுவது வேடிக்கையாக உள்ளது என்றும் எரான் தெரிவித்தார். (எ-11)

# வெட்டுக்காயத்துடன் மூதாட்டியின் சடலம்

(அளவெட்டி)

யாழ். இளவாலை பிரதேசத்தில் 75 வயது மூதாட்டி ஒருவர் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை இரவு 07.00 மணி அளவில் அயல் வீட்டார் வழங்கிய தகவலின் படி இளவாலை பொலிஸார் குறித்த சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர்.

பலியானவர் இராஜநாயகம் இராஜேஸ்வரி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் குறித்த வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதேவேளை சடலத்தில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாக கூறிய பொலிஸார், கொள்ளையடிக்க வந்தவர்கள் இவரைக் கொலை செய்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ-25)

# மின்சாரம் தாக்கி இலங்கை அகதி பலி

இந்தியாவின் ஓசூரில் மின்சாரம் தாக்கி, இலங்கை அகதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஓசூரை அடுத்த கெலவரப்பள்ளி அணை அருகே உள்ள, இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வரும் ஜோட்ச் (39) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

இவர், பாகலூர் சாலையில் உள்ள, விஸ்வநாதபுரம் பகுதி விவசாய தோட்டத்தில், இயந்திரம் மூலம் புற்களை வெட்டி கொண்டிருந்தார்.

அப்போது, ஜோட்ச் மீது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியது. உயிருக்கு போராடி கொண்டிருந்த ஜோட்சை மீட்ட அக்கம் பக்கத்தினர், ஓசூர்-பாகலூர் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் என தமிழக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. பின்னர், மேலதிக சிகிச்சைக்காக, பெங்களூர் கொண்டு செல்லும் வழியில் ஜோட்ச் மரணமடைந்துள்ளார். (எ-11)

# விமானத்தில் உயிரிழப்பு

சிங்கப்பூரில் இருந்து இலங்கையை நோக்கி வந்து கொண்டிருந்த விமானத்தில் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கையரொருவர், திடீரென அவ்விமானத்தினுள் மரணத்தைத் தழுவிய சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. பொல்காவலையைச் சேர்ந்த 57 வயது நபரொருவரே நேற்று அதிகாலை 1.35 மணியளவில் திடீரென சுகவனமுற்ற நிலையில் இவ்வாறு விமான த்தினுள் மரணமாகியுள்ளார்.

பிரேத பரிசோதனைகள் நீர் கொழும்பு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)


## மரண அறிவித்தல்

### திருமதி பரஞ்சோதி அன்னலக்சுமி



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி அன்னலக்சுமி நேற்று (2014.10.22) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்பு மனைவியும் நிர்மலாதேவி (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), மாலினி (யாழ்ப்பாணம்), ஸ்ரீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வைகுந்தவாசன், சுபாசினி, புவேக்கா, சுதா, அம்பிகைபாதன் (சோதி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் மாமியாரும், சுமித்தா, வினித்தா, அருணன், அருண்யா, நிருஜா, நளினாசினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி), அச்சுதன் (யாழ்.இந்துக் கல்லூரி), கஜப்பிரியன் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), சஜானா, மயூரிகா, யுகேஷ், அபிஜே, அபேக்கரன், ஹருணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

மருமகன்: அம்பிகைபாதன்
0778312284

(8138)



## அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்

01. சுப்பிரமணியம் ஞானேஸ்வரராசா (B கிளை)
02. பொன்னம்பலம் சசிகரன் (B கிளை)
03. வீரசிங்கம் கலைச்செல்வன் (A கிளை)

மூவரும் 07-ம் வட்டாரம், குமுழமுனை, முள்ளியவளை (மூவரும் உறுப்பினர்கள் முல்லைத்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க குமுழமுனைக்கிளை)

வழக்காளிகள்

வழக்கு இல:- நானாவிதம்/72

எதிராக

01. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு
02. அருளானந்தம் சீராளன்
03. சிவபாலசிங்கம் பாலசுந்தரம்
04. திருமதி புஸ்பலட்சுமி முகுந்தன்

மூவரும் முறையே தலைவர், உறுப்பினர்கள் நியமன சபை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு.

05. தில்லையம்பலம் சிவபாதம் உறுப்பினர் முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் குமுழமுனைக் கிளை (B கிளை)
06 கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களம், முல்லைத்தீவு.
07. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு திணைக்களம் முல்லைத்தீவு.

எதிராளிகள்

### நீதிமன்ற அறிவித்தல்

மேற்படி வழக்காளிகள் கரைத்துறைப்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) முல்லைத்தீவு குமுனமுனை B கிளையில் 5-ம் எதிராளி உறுப்பினராகையால் அதனடிப்படையில் 5-ம் எதிராளி B கிளையின் உறுப்பினரே என்று பிரகடனப்படுத்தும் படியும், 20.09.2014 இல் நடைபெறவிருந்த குமுனமுனை A கிளை இல.15 பொதுக் கூட்டத்தில், 5-ம் எதிராளி குமுனமுனை A கிளையில் இணைத்து பங்குபெற்றுவதனையும், அதற்கான பேராளர் தெரிவுக்கான கூட்டத்தினையும் தடை செய்யும் வகையில் எதிராளிக்கெதிராக இடைக்காலத் தடையுத்தரவு கோரியும் இடைக்காலத் தடையுத்தரவுக்கு முன்னர் 14 நாட்கள் வலுவில் இருக்கக் கூடியதான கட்டாணை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

இந் நீதிமன்றில் 14.10.2014 அன்று குடியியல் நடைமுறைக்கோவையின் 16-ம் பிரிவுக்கமைய வழக்காளிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இடப்பட்ட கட்டளைக்கமைய இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

குறித்த கரைத்துறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) முல்லைத்தீவு கிளையில் அக்கறையுள்ள ஆள் எவரும் 30.10.2014-ம் திகதி மன்றில் தோன்றி கட்சிக்காரராகச் சேர்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் என இத்தால் தரப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

க. கணேஸ்வரன்
வழக்காளியின் சட்டத்தரணி.

எம். தியாகராஜா
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு.

(8135)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 5392
(சி-882)




(C-8284)



## நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை தெரிவு செய்ய விரும்புபவரா?

உங்களின் எதிர்காலத்தினை வெற்றிகரமானதாக மாற்றிட ஆசியாவின் ஜாம்பவானுடன் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் பயணத்தினை இப்பொழுதே ஆரம்பியுங்கள்.

★ கல்வித் தகைமை: க.பொ.த. உயர்தரம்
★ வயது :- 18-60

TP:-0777121868



(8137)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா வந்தாச்சு! அடங்கிய அக்ரஹாரா!



உச்ச நீதிமன்றம் 17 ஆம் திகதி மதியம் 12.30 மணிக்கு ஜெயலலிதா வுக்கு பிணை வழங்கியது என்ற செய்தி வெளியே கசிந்ததும் உற்சாகக் கொண்டாட்டம் ஆரம்பித்தது. தண்டனை கொடுத்தவர்களே பிணை கொடுக்க வேண்டும் என்பதால், ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு நடைபெற்ற பெங்களூர் சிட்டி சிவில் நீதிமன்றில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் ரிலீஸ் ஆர்டர் வாங்குவதற்காக அ.தி.மு.க நிர்வாகிகள் காத்திருந்தனர். ஆனால், அன்று மாலை வரை பிணை உத்தரவு வரவில்லை. 18 ஆம் திகதி காலை நீதிபதி குன்ஹாவின் வருகையை எதிர்பார்த்து ஜெயலலிதாவின் வழக்கறிஞர்கள் குமார், மணிசங்கர், நவநீதகிருஷ்ணன், செந்தில், அன்புக்கரசு, செல்வக்குமார், கருப்பையா ஆகியோர் காத்திருந்தார்கள். நீதிபதி குன்ஹாவைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே அ.தி.மு.க நிர்வாகிகள் பலரும் சிறப்பு நீதிமன்றத்தில் கூடியிருந்தனர். அந்த நேரத்தில் வணக்கம் சொல்லி அமர்ந்தார் நீதிபதி குன்ஹா. ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் குமார், உச்ச நீதிமன்ற பிணை ஆர்டரை கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்த குன்ஹா, அனுமதிக்கிறேன் என்றார். அதன் பின்னர் ஷ்யூரிட்டி ஆவணங்களை சரிபார்த்தார். ஜெயலலிதாவுக்கு கர்நாடக மாநில அ.தி.மு.க. செயலாளர் புகழேந்தியின் மனைவி குணஜோதியும், டாக்டர் வெங்கடேஷின் சகலை பரத்தும் ஷ்யூரிட்டி கொடுத்திருந்தார்கள். அவர்களின் குடும்ப அட்டை, ஆதார் அட்டைகளை சரிபார்த்தார்.

அதன் பின்பு ரிலீஸ் ஆர்டர் டைப் செய்யப்பட்டது. இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு நீதிபதி குன்ஹா அதில் கையெழுத்திட்டார். கோர்ட் தபால் அலுவலகத்தில் அந்த பிணை ஆர்டர் கொடுக்கப்பட்டது. தபால் ஊழியர் வெங்கடேஷை, அ.தி.மு.க வழக்கறிஞர்கள் தங்கள் காரில் வரச் சொன்னார்கள். ஆனால் அவரோ, அரசு விதிப்படி நான் என்னோட வாகனத்தில் தான் போக வேண்டும். இல்லைன்னா அரசு வாகனத்தில் போகலாம்!

பரப்பன அக்ரஹாராவுக்குப் போக... அந்த வாகனத்தைப் பின்தொடர்ந்தனர் அ.தி.மு.க. வழக்கறிஞர்கள். சரியாக 3 மணிக்கு பிணை ஆர்டர் ஜெயிலில் கொடுக்கப்பட்டது.

### திருப்பிக் கொடுக்கப்பட்ட வாட்ச்!'

பிணை ஆர்டர் சிறைக்கு வருவதற்கு முன்னதாகவே ஜெயலலிதா, சசிகலா, இளவரசி ஆகிய மூவரும் புறப்படத் தயாராக இருந்தனர். ஆர்டர் சீக்கிரமே வந்தாலும் நாம் மூன்று மணிக்குப் பிறகு கிளம்பலாம்!'




அமைதியாகவே இருந்தார்.

கம்மல்களை சிறை நிர்வாகம் வாங்கிக் கொண்டது. அந்த வாட்ச், வைர கம்மல்களை ஜெயலலிதா

வர் பன்னீர் செல்வம் மட்டும் கயிறுக்கு மறுபுறம் இருந்தார். ஜெயலலிதா வெளியே வந்ததும் காரில்

*நீதிபதி குன்ஹா:* நீங்க பெங்களூரில் இருக்கீங்க... அவங்க சென்னையில் இருக்காங்க, அவங்களை எப்படி உங்களுக்குத் தெரியும் என்று ஆங்கிலத்தில் கேட்டார். குணஜோதிக்கு ஆங்கிலம் தெரியாததால், புரியாமல் விழித்தார். நீதிபதி குன்ஹா அதையே திருப்பி கன்னடத்தில் கேட்டார்.

*குணஜோதி:* அவங்களை நன்றாகத் தெரியும்!

*நீதிபதி குன்ஹா:* நாளைக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் நீங்கள் மாட்டிக்கொள்வீர்கள் என்பது தெரியுமா... தெரியாதா?

*குணஜோதி:* தெரியும்!

*நீதிபதி குன்ஹா:* இந்த ஆவணங்கள் அனைத்தும் உங்கள் பெயரில்தான் இருக்கிறதா?

*குணஜோதி:* ஆமாம்!

"சசிகலா எனக்கு பமலி பிரெண்ட்!'

அடுத்து சசிகலாவுக்கு கர்நாடக மாநில அ.தி.மு.க இணைச்செயலாளர் ராஜூவும், பெங்களூர் தொழிலதிபர் லட்சுமிபதியும் ஷ்யூரிட்டி கொடுத்திருந்தார்கள். அவர்களிடம் நீதிபதி குன்ஹா, ஜெயலலிதாவைக்கூட ஒருவேளை உங்களுக்குத் தெரியும் என்று சொல்லலாம். சசிகலாவை எப்படி உங்களுக்குத் தெரியும்?

*ராஜூ:* சசிகலா எங்க பமலி ப்ரெண்ட்!""

*நீதிபதி குன்ஹா:* பிணை கொடுக்க ஷ்யூரிட்டிக்கான சட்ட திட்டங்கள் தெரியுமா?""

*ராஜூ:* தெரியும்!

*நீதிபதி குன்ஹா:* இந்த சொத்து வாங்கியபோது எவ்வளவு மதிப்பு, தற்போது என்ன மதிப்பு?

*ராஜூ* "வாங்கியதைவிட தற்போது 3 மடங்கு அதிகமாக இருக்கிறது.

"நானும் சுதாகரனும் நண்பர்கள்!'

சுதாகரனுக்காக தொழிலதிபர் லட்சுமிபதியின் மகன் லோகேஷும், கர்நாடக மாநில அ.தி.மு.க இணைச்செயலாளர் ராஜூவின் மனைவி அன்பம்மாளும் வந்திருந்தனர். அவர்களிடம் குன்ஹா, சுதாகரனை உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று கேட்க, நானும் சுதாகரனும் நண்பர்கள்! என்றார் லோகேஷ்.

இளவரசிக்கு கர்நாடக மாநில அ.தி.மு.க செயலாளர் புகழேந்தியும், ராஜேந்திரன் என்பவரும் ஷ்யூரிட்டி கொடுக்க வந்தனர். புகழேந்தியிடம் நீதிபதி, இளவரசியின் கணவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்று கேட்க, அவர் இறந்துவிட்டார்! என்றார் புகழேந்தி. அவரோட பெயர் என்ன? என்றார். ஜெயராமன் என்று புகழேந்தி சொன்னார்.

என்று சசிகலாவிடம் சொல்லியிருக்கிறார் ஜெயலலிதா. மதியம் ஒரு மணி அளவில் ஜெயலலிதா உட்பட மூன்று பேருக்கும்



பூசணிக்காய் ரெடி...

பவானி சிங் தன் சேம்பரில் அமர்ந்திருந்தார். சரியாக 11.05 இற்கு சிரித்த முகத்தோடு அனைவருக்கும்

உங்களோடு வர முடியாது என்று மறுத்துவிட்டார். பிறகு, பொலிஸ் வாகனத்தில் பிணை ஆர்டர்

மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டன. சிறைக்குள் அடைக்கப்பட்டபோது, ஜெயலலிதா கையில் கட்டியிருந்த வாட்ச் மற்றும் வைர

விடம் திருப்பிக் கொடுக்கப்பட்டு, அதற்காக கையெழுத்தும் பெறப்பட்டது. அதே போல சசிகலா, இளவரசி ஆகியோரின் நகைகளை அவர்களிடம் திருப்பிக் கொடுத்தனர் சிறை அதிகாரிகள். சரியாக 3.11 இற்கு சிறையில் இருந்து வெளியே வந்தார் ஜெயலலிதா. வந்ததும் ஒருமுறை திரும்பி ஜெயிலைப் பார்த்தார். அதன் பிறகே காரை நோக்கி நடந்தார்.

### காலில் விழுந்த முதல்வர்!

சிறைக் கதவுகளுக்கு வெளியே தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும், அமைச்சர்களும் காத்திருந்தனர். ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பு இருப்பதால் அமைச்சர்களைக்கூட அருகே அனுமதிக்காமல் கயிறு கட்டப்பட்டு, அதற்குப் பின்பாகவே நிறுத்தப்பட்டனர். முதல

ஏறுவதற்கு முன்பாக, அவரது காலில் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டார். அவரைப் பார்த்து எந்த ரியாக்ஷனும் காட்டாமல் இறுகிய முகத்துடன் காரில் ஏறிக்கொண்டார் ஜெயலலிதா. அதே காரின் பின் சீட்டில் சசிகலாவும், இளவரசியும் ஏறினர். காரின் நானகு டயர்களுக்கும் எலுமிச்சைப் பழங்கள் வைக்கப்பட்டன. பூசணிக்காயில் சூடம் ஏற்றி ஆரத்தி எடுக்கப்பட்டு காருக்கு முன்பாக உடைக்கப்பட்டது. அதன் பிறகே ஜெயலலிதா கார் அங்கிருந்து புறப்பட்டது. ஜெயில் வாசலில் இருந்து செக்போஸ்ட் வரை, அமைச்சர்கள், எம்.எல். ஏக்கள், மேயர்கள், எம்.பிக்கள், முக்கிய பிரமுகர்கள் என் வரிசைகட்டி நின்றிருந்தனர். அவர்களைப் பார்த்தபோதும் ஜெயலலிதா

### தலை குப்புற விழுந்த மேயர்!

ஜெயலலிதாவைப் பார்த்ததும் அனைவரும், "அம்மா வாழ்க! தங்கத் தாரகையே, புரட்சித் தலைவி வாழ்க!' என கோஷங்கள் எழுப்பி உணர்ச்சிவசப்பட்டதும், கர்நாடக பொலிஸார் மொழி புரியாமல் என்னவோ, ஏதோவென பதறிவிட்டனர். பாதுகாப்புக்காக கட்டப்பட்டிருந்த கயிற்றை வேகமாக பொலிஸார் பிடித்து இழுக்க... அந்தக் கயிறு மதுரை மேயர் ராஜன் செல்லப்பா காலில் மாட்டி, அவர் தலை குப்புற விழுந்தார். தலையில் அடிபட்டு எழ முடியாமல் கதறி அழுதார். அவரை யாரும் கண்டுகொள்ளவே இல்லை. ஜெயலலிதாவின் கார் செக்போஸ்ட்டை தாண்டிய பிறகுதான் மேயரை, மதுரை மாநகரச் செயலாளர் முத்துராமலிங்கம் தூக்கிவிட்டார். பரப்பன அக்ரஹாராவில் இருந்து புறப்பட்ட ஜெயலலிதாவின் கார், சரியாக 3.50 மணிக்கு ஹெச்.ஏ.எல் ஏர்போர்ட்டை வந்தடைந்தது. வழி நெடுகக் கூட்டத்தைப் பார்த்த பிறகே ஜெயலலிதா முகத்தில் சின்ன உற்சாகம் தெரிந்தது. ஏர்போர்ட்டில் காத்திருந்து கையசைத்தவர்களைப் பார்த்துச் சிரித்தார். வணக்கமும் வைத்தார். ஏர்போர்ட்டில் ஜெயலலிதாவுக்காக காபி தயாராக வைத்திருந்தார் இளவரசியின் மகன் விவேக். அங்கே சற்று இளைப்பாறி காபி சாப்பிட்டுவிட்டு சென்னைக்குப் புறப்பட்டார்.

22 நாட்களாக பரபரப்பாக இருந்த பரப்பன அக்ரஹாரா இப்போது வெறிச்சோடிக் கிடக்கிறது!

ஆனந்த விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமையும் மேன்மையும் தரும் கேதாரகௌரி விரதம்



உலகெங்கும் வாழும் இந்துக்களின் பண்பாட்டியலில் விரதம் அனுஷ்டிப்பதும், அக்காலங்களில் இருந்து இன்றுவரைக்கும் இந்து ஆலயங்களுக்குச் சென்று இறை வழிபாட்டுடன் பிரார்த்தனை செய்வதும், இதன் பயனாக எண்ணரிய சித்திகளைப் பெற்றுக் கொள்வதும், தொன்றுதொட்டு எமது சமயத்திலே காணப்பட்டுவரும் மரபாகும்.

புலன்வழி மனம் செல்லாது நிலை நிறுத்தும்பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும், உடல், மனம், வாக்கினால் விதிப்படி இறைவனை மெய்யன்போடு வழிபட்டு, தேகம் சுத்தமாகி, பிணிகள் அகன்று, நீண்ட ஆயுள் பெற்று மனம் தெளிவடைந்து, பாவங்கள் நீங்கி, எண்ணிய கருமங்கள் யாவும் சித்தியாகி, மனமகிழ்வும் பக்தியும் உண்டாகி நன்மைகள் பெற்று வாழ இந்துக்கள் விரதம் அனுஷ்டித்து வருவது நம்பிக்கையுடன் கூடிய வழக்கமாகும்.

இவ்வாறு இந்துக்கள் அனுஷ்டிக்கும் விரதங்கள் பல உள்ளன. அவற்றுள் விநாயகசதுர்த்தி விரதம், கந்தசஷ்டி விரதம், விநாயகசஷ்டி விரதம், சித்திரகுப்த விரதம், பிரதோஷ விரதம், ஏகாதசி விரதம், நவராத்திரி விரதம், மஹாலக்ஷ்மி விரதம், கேதார கௌரி விரதம், சிவராத்திரி விரதம் எனப்பல விரதங்கள் உள்ளன.

மனவலிமை உடையவர்கள் தாம் எண்ணியவற்றை எண்ணியபடியே அடைவார்கள் என்பதற்கமைய இந்துப் பெருமக்கள் இவ்வாறான விரதங்களை அனுஷ்டித்து பலகோடி நன்மைகளைப் பெறுவதை எமது சமயத்திலே கண்ணூடாக காண முடிகிறது.

திருக்கைலாச மலையிலே பரமசிவன் பார்வதி சமேதரராக வீற்றிருந்த வேளையிலே தேவர்களும் முனிவர்களும் அடியார்களும் அங்கு சென்று சிவன் உமை ஆகிய இருவரையும் சுற்றி வந்து வணங்கினார். அந்த வேளையிலே அங்கு வந்த பிரிங்கி முனிவர் விகடக் கூத்து ஒன்றை ஆடி அங்கிருந்தவர்களை மகிழ்ச்சி அடையச் செய்த பின்னர் உமாதேவியை விலக்கி விட்டு சிவபெருமானை மட்டும் சுற்றி வந்து வணங்கினார். உமாதேவியை அலட்சியம் செய்த முனிவரின் உடலிலிருந்த சக்தியை உமாதேவி எடுத்துக் கொண்டதனால் பிருங்கி முனிவர் சபையிலே சோர்ந்து விழுந்தார்.

இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் பிருங்கி முனிவர் மீது இரக்கம் கொண்டு அவரது கையிலே தடியொன்றைக் கொடுத்து அதனை ஊன்று கோலாகக் கொண்டு நடந்து செல்வதற்கு அனுக்கிரகம் செய்தார்.

இதனால் ஆத்திரமும் அவமானமும் அடைந்த உமா தேவி சிவபெருமானிடம் கோபித்துக் கொண்டு பூவுலகிற்கு வந்தார். பன்னிரண்டு வருடங்கள் மழையின்றி வரண்டிருந்த வனத்திலே ஒரு வில்வ மரத்தடியில் உமாதேவியார் வீற்றிருந்தார். உமாதேவியின் வருகையால் அந்த வனம் புதுப்பொலிவு பெற்றது.

அந்த வனத்திலே வசித்த கௌதம முனிவர் திடீரென உமாதேவியாருக்கு ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணத்தை அறிய முற்பட்ட போது உமாதேவியைக் கண்டு நடந்த சங்கதிகளை அறிந்து கொணடார்.

புரட்டாதி மாதம் சுக்கில பட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருக்ஷ்ண பட்சம் (தீபாவளி) அமாவாசை வரையுள்ள கேதா ரேசுவரர் விரத மகிமை பற்றியும், அதனை அனுஷ்டிக்கும் முறைமை பற்றியும் விளக்கமாகக் கூற கௌரி அம்மை இவ்விரதம் நோற்று அர்த்தநாதீஸ்வரர் வடிவாகினார் என்பதை புராணக்கதைகளினூடாக அறிகின்றோம்.

சித்திராங்கதன் என்னும் கந்தரூபனும் வச்சிரதேயன் என்ற மன்னவனும், தேவ கன்னியர்களும் புண்ணியவதி - பாக்கியவதி என்ற சகோதரிகளும் இவ்விரத பலனால் மேன்மை அடைந்தனர் என்றும், இவ்விரதத்தை இடையிலே கைவிட்ட பாக்கியவதி பல துன்பங்களை அனுபவித்தாள் என்றும் மீண்டும் இந்த விரதம் பிடித்து இன்பமுற்றாள் எனும் கதைகளுமுள்ளன.

இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிக்க வேண்டிய இவ்விரதத்தினை ஆரம்பிக்கும் நாளில் ஒரு வெற்றிலை, ஒரு பாக்கு, ஒரு பழம், பலகார வகைகள் ஒவ்வொன்றும், பாயாசம் என்ற ஒழுங்கில் வைத்து வழிபடுதல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் இவ் வெண்ணிக்கை ஒவ்வொன்றாகக் கூடி இறுதி நாளில் இருபத்தொரு எணணிக்கை கொணடதாக அமைய மேற்படி பொருட்களை வைத்து பாயாசம், சர்க்கரை அன்னம், புளி அனனம் முதலியவற்றையும் வைத்து தூப தீபம் காட்டிப் பூசை செய்தல் வேண்டும்.

இதற்கமைய இருபத்தொரு தினங்கள் இந்த விரதத்தினை கடைப்பிடிக்க முடியாதவர்கள் இவ்விரத தினத்தன்று இருபத்தொரு வெற்றிலை, இருபத்தொரு பாக்கு, இருபத்தொரு பழம், இருபத்தொரு பட்சணங்கள் என்ற வகையில் வைத்து நைவேத்தியம் செய்து இவ்விரதத்தினை அனுஷ்டிப்பர்.

அத்துடன் இருபத்தொரு இழைகள் உடைய நூலினை கும்பத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முடிச்சு இட்டு இறுதி நாளாகிய இருபத்தொராம் நாள் இறுதி முடிச்சு இட்டு, அமாவாசை தினத்தன்று இரவில் உபவாசம் இருந்து கண்விழிப்புடன் அந்த நூற்கயிறை குறிப்பாக பெண்கள் இடது புயதிலே கட்டிக் கொள்ளுதல் வேண்டும். ஆண்களும் இவ்விரத நூலைக் கட்டுவது தவறல்ல. சிறப்புடையதாகும்.

இருபதாம் நாள் பகலில் உணவை உட்கொள்ளாதிருந்து பின்னேரத்தில் பூஜை முடிந்ததும் நிவேதித்த பலகார பிரசார உணவை மட்டும் உட்கொண்டும், பூஜைத் தீர்த்தத்தையும் அருந்தியும் வருதல் வேண்டும். இருபத்தொராம் நாள் உபவாசத்தையும் கண் விழிப்பையும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

குறிப்பாக பெண்களால் அனுஷ்டிக்கப்படும் இவ்விரதத்தினை இருபத்தொரு வருடங்கள் அனுஷ்டிக்க வேண்டும். இதற்கும் இயலாதவர்கள் தொடர்ச்சியாக ஏழு வருடங்கள் அனுஷ்டிக்க வேண்டும் என்று சாஸ்திரங்களிலே கூறப்பட்டுள்ளது. மகாசக்தி வாய்ந்த இவ்விரதத்தினை அனுஷ்டிப்போரும் அதற்கு ஆவன செய்வோரும் திருவருள் துணையால் வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு குறித்த விரத பூஜையின் பலன்களை முழுமையாகப் பெறுவார்கள். சிறப்பாக கணவன் - மனைவி நீண்டகாலம் பிரியாது சேர்ந்து வாழுவதற்கு இவ்விரதம் பலன் கொடுக்கின்றது.

மேற்படி இவ்விரத பூஜை வழிபாடுகளும் இம்முறையும் எமது குலதெய்வம் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவிலும் மிகவும் சிறப்பாக பூஜைப் பிரயோகங்கள் தமிழ் விளக்கங்களுடன் நடைபெற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது.

விரதகாப்பு எடுக்கவிருக்கும் அடியார்களும் தமது நூல் கிடைப்பதற்குரிய பதிவினை ஆலய தர்மகர்த்தா சபை அலுவலகத்தில் மேற்கொண்டு, மேற்படி நடைபெறவுள்ள பூஜை வழிபாடுகளில் பங்குபற்றி அம்பாளினதும் கேதார கௌரி சமேத கேதாரீஸ்வரப் பெருமாளின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கலாநிதி மஹேஸ்வரர் குருக்கள்
பாலகைலாசநாதசர்மா
சிரேஷ்டவிரிவுரையாளர்,
சமஸ்கிருதத்துறை,
சுவாமி விபுலானந்த
அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ரத்தம் தோய்ந்த கட்சியல்ல

## நாமல் எம்.பி கூறுகிறார்

(கொழும்பு)

இரகசியமாகவேனும் நாட்டை பிளவுபடுத்த அனுமதிக்கப்பட மாட்டாது என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தெதிகம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி இளைஞர் மாநாட்டில் அண்மையில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டை மீளவும் பிளவுபடுத்த இரகசியமாகவோ அல்லது பரகசியமாகவோ செய்யப்படும் முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது.

அந்தப் பொறுப்பு இளைஞர்களைச் சாரும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கைகளில் இரத்தம் தோய்ந்த கட்சி அல்ல என்பதனை பொறுப்புணர்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் இரத்தம், சதை, உயிர்த் தியாகம் செய்த கட்சியாகும். சமூக நீதிக்காக வடக்கிலும் தெற்கிலும் காலத்திற்கு காலம் இளைஞர் கிளர்ச்சிகள் ஏற்பட்டன.

இளைஞர்களின் கிளர்ச்சிக்கு தலைமைத்தும் வழங்கிய சில கடும்போக்குவாத தலைமைகள் தங்களது குறுகிய அரசியல் நோக்கத்தை பூர்த்தி செய்து கொள்வதற்கு, இளைஞர்களை பயன்படுத்திக் கொண்டனர். இதனால் இளைஞர்களுக்கும் நாட்டுக்கும் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டன. வறுமை தொழில் வாய்ப்பு இன்மை உள்ளிட்ட சமூக அநீதிகளுக்காக



இளைஞர்கள் கிளர்ந்து எழுந்தனர். அநீதிக்கு எதிராகவும் அணி திரண்டனர். வடக்கில் இவ்வாறு கிளர்ந்து எழுந்த இளைஞர்களுக்கு பிரிவினைவாத, இனவாத பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமை தாங்கினர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேர்தலில் வெற்றி பெறும் ஆற்றல் ஐக்கிய தேசியக்கட்சிக்கே உண்டு

எந்தவொரு தேர்தலையும் வெற்றி கொள்ளும் ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே இருப்பதாக கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

மக்கள் கட்சியை சுற்றி அணி திரண்டுள்ளனர். மக்கள் சக்தியின் ஊடான வெற்றியை தடுக்க எவரினாலும் முடியாது.

எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தலா அல்லது நாடாளுமன்ற தேர்தலா நடத்தப்பட உள்ளது என்பது பற்றி எங்களுக்கு கவலையில்லை.

நாம் எப்படிச் சொல்வது அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என சில வேளைகளில் அது நாடாளுமன்றத் தேர்தலாகக் கூட இருக்கலாம்.

அரசாங்கம் உண்மையில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவில்லை. மின்சாரக் கட்டணம், எரிபொருள் மற்றும் எரிவாயு விலை குறைப்பின் ஊடாக மக்களிடம் அறவீடு செய்யப்பட்ட வரியின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இதனை விலை குறைப்பாக கருத முடியாது. போர் முடிந்து விட்டது என அரசாங்கத்தினால் பிரசாரம் செய்ய முடியாது. தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தற்போது அரசாங்கத்திலேயே உள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் உயர் பதவியொன்றும் புலி உறுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல ஜே.வி.பிக்காக நிதி சேகரித்த நபருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் போது எவ்வாறு போர் வெற்றி பற்றி மேடைகளில் பேச முடியும்? ஜனாதிபதி தேர்தல் சட்டவிரோதமானது என நாம் கூறப் போவதில்லை.

சட்டவிரோதமானதாக இருந்தால் ஜனாதிபதி தேர்தல் நடைபெறாது. எந்தவொரு தேர்தலையும் வெற்றி கொள்ள நாம் தயார். எந்தவொரு தேர்தலிலும் நாம் வெற்றி யீட்டுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2014-16.11.2014



## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்**

**திட்டமிட்டுச் செயலாற்றி வெற்றி வாகை சூடும் தனுசு ராசி நேயர்களே!**

**வியக்கும் தகவல் வெளிநாட்டிலிருந்து வந்துசேரும்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் வியாழன் 8 ஆம் இடத்தில் உச்சம் பெறுகிறார். 12இறகு அதிபதியான செவ்வாயோ உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே, பயணங்கள் அதிகரிக்கும். நீண்ட தூரத்திலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள முன்வருவீர்கள். உறவினர்களோடு ஏற்பட்ட சொல் யுத்தம் சுமுகமாகும்.

பத்தாமிடத்தில் புதன் உச்சம் பெறுகிறார். லாப ஸ்தானத்தில் சனி உச்சம் பெறுகிறார். அதே நேரத்தில் உங்கள் ராசிநாதனான குருவிற்கு பகை கிரகமாக விளங்கும் சுக்ரனோ நீச்சம் பெறுகிறார். நீச்ச பங்க ராஜயோகம், புத ஆதித்யயோகம், புத- சுக்ர யோகம் ஆகிய யோகங்களோடு மாதம் தொடங்குவதால் நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நேசித்தவர்கள் நீங்கள் யோசித்த காரியத்தை முடித்துக் கொடுப்பர்.

நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். நில புலன்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிகார வர்க்கத்தினர் உங்கள் அன்பிற்கு கட்டுப்பட்டு நடந்து கொள்வர். 4 இல் கேது இருப்பதால் பெற்றோர் வழியில் பிரியம் கொஞ்சம் குறையலாம். அதே நேரத்தில் 7இறகு அதிபதி புதன் உச்சம் பெற்றிருக்கிறார். எனவே பயணத்தால் பலன் உண்டு. எனவே, தாய்வழி உறவினர்களில் பகையாக இருந்தவர்கள் நட்பாக மாறுவர்.

பத்தில் ராகு சஞ்சரிப்பதால் புதிய தொழில் தொடங்கும் எண்ணம் உருவாகும். பழைய தொழிலில் சேர்ந்த பங்குதாரர்களை விலக்கி விட்டு புதியவர்களை சேர்த்துக் கொண்டு தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொள்வீர்கள். அரசுவழிச் சலுகைகள் உரிய உங்கள் ராசியில் பதிவது அவ்வளவு நல்லதல்ல. எனவே, தேக நலனில் திடீர் திடீரென அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். சேமிப்பில் ஒரு பாதி தொகையை வைத்தியச் செலவிற்காக கொடுக்கும் சூழ்நிலை உருவாகலாம். எனவே, எள் தீபம் ஜோடி தீபமாக ஏற்றிச் சனி பகவான் சன்னிதியில் கவசம்பாடி வழிபாடு செய்யுங்கள். காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**துலாம் ராசியில் சுக்ரனின் சஞ்சாரம்!**

அக்டோபர் 20 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 6 இறகு அதிபதி 11 இல் சஞ்சரிக்கும் பொழுது நீச்ச பங்க ராஜ யோகம் செயற்படப் பேவதால் திடீர் திருப்பங்களும், தித்திக்கும் செய்திகளும் வந்து சேரும. தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரண சேர்க்கை உருவாகும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவைகள் வந்து உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட வைக்கும். அதே நாளில் சனி பலமிழந்து சஞ்சரிப்பதால் சகோதர சச்சரவுகளை சந்திக்க நேரிடும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 13 ஆம் திகதியில் விருச்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது வரவும், செலவும் சமமாகும். வழக்குகளில் திசைதிருப்பம் ஏற்படலாம். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். மக்கள் செல்வங்களால் வந்த பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முக்கியப் புள்ளிகளை சந்திப்பீர்கள். எதிரிகள் இணக்கமாக நடந்து கொள்வர். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம். இம்மாதம் வடிவேலன் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் சுகங்களும், சோகங்களும் மரறி, மாறி வரலாம். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். கொடிகட்டிப் பறந்த குடும்ப பிரச்சினையில் ஒன்றிரண்டு நல்ல முடிவிற்கு வரும். மாற்றினத்தவர்கள் உங்கள் பணிக்கு ஒத்துழைப்பு செய்வர். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதரவு கிடைக்கும். குடும்ப பெரியவர்

## நீண்ட தூரத்தில் இருந்து வரும் அழைப்பை ஏற்றுக்கொள்வீர்கள்

நேரத்தில் கிடைத்து மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும். தன சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி உச்சம் பெற்றிருப்பதால் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். எதிரிகள் விலக எடுத்த முயற்சி கைகூடும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

அதே நேரத்தில் சனியின் 3ஆம் பார்வை

டிசம்பர் 2 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 7, 10 இற்கு அதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வாழ்க்கைத் துணைக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்து வருமானம் இருமடங்காகும். கூட்டாளிகள் கூடுதல் லாபம் பெற வழி சொல்லுவர். மாமன், மைத்துனர் வழியில் ஆதாயம் கிட்டும்.

களிடமும் கூடுதல் கவனத்துடன் பேசுவது நல்லது. பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். நவக்கிரக வழிபாடு நன்மையை வழங்கும்.

சஷ்டி விரதமிருந்து முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் சகல யோகங்களும் வந்து சேரும்.

## சிவல்புரி சிங்காரம்

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**விரயங்களிலிருந்து விடுபட விழிப்புணர்ச்சி தேவை!**

**எப்பொழுதும் எதிர்காலம் பற்றிய சிந்தனையில் இருக்கும் மகர இராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசிநாதன் சனி வலிமையிழக்கிறார். அதுமட்டுமல்ல அஷ்டமாதிபதியுடன் கூடித் தொழில் ஸ்தானத்தில் இருக்கிறார். எனவே எந்த நேரமும், சொந்த வேலையாக இருந்தாலும் சரி, சொல்லும் வேலையாக இருந்தாலும் சரி விழிப்புணர்ச்சி இல்லாவிட்டால் வீண் விரயங்களைச் சந்திக்க நேரிடும்.

பொதுவாக ராசிநாதன் வலிமை இழந்திருக்கும் பொழுது ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். எனவே, அலைச்சலைக் குறைத்துக் கொள்வதன் மூலமும் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலமும் மருத்துவச் செலவுகளை குறைத்துக் கொள்ள இயலும்.

குருவின் பார்வை உங்களுக்கு கைகொடுக்கிறது. எண்ணங்களை எளிதில் செயலாக்க இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பணப்பற்றாக்குறை அகலும். பக்கத்து வீட்டாரின் பகையும் மாறும்.

ஆறுக்கு அதிபதி உச்சம் பெறுகிறார். எனவே, மறைமுக எதிர்ப்புகளும் உங்களுக்கு இருக்கத்தான் செய்யும். உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு உறவினர்களால் ஜீரணிக்க முடியாது. நீச்ச பங்க ராஜயோக அமைப்பில் புதனும், சுக்ரனும் இணைந்திருப்பதால் பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். பிள்ளைகளால் ஒருசில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். தகுந்த பரிகாரங்களை சுய ஜாதக ரீதியாக செய்து கொண்டால் தக்கவிதத்தில் வாழ்க்கை அமையும். தனவரவு திருப்திகரமாக இருக்கும்.

மாதக் கடைசியில் சுக்ர பெயர்ச்சிக்குப் பின்னால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். பயணங்களால் பலன் கிடைக்கும். வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. வளர்ச்சிக்கு வித்திடும் நண்பர்களால் முன்னேற்றமும் வந்து சேரும். பெற்றோரின் உடல் நலத்தில் மட்டும் கொஞ்சம் கவனம் தேவை.

என்னயிருந்தாலும் ராசிநாதன் சனிக்குரிய பரிகாரங்களையும், சூரிய வழிபாட்டையும் முறையாகச் செய்வதன் மூலம் தடைகளைத் தகர்த்தெறிய முடியும். சனி கவசம் பாடி சனி பகவானை வழிபாடு செய்யுங்கள். எள் கலந்த

**சுக்ரனின் ஆதிக்கம்!**

அக்டோபர் 20 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இதுவரை நீச்சமாக இருந்த சுக்ரன் இப்பொழுது வலிமை அடைவது யோகம்தான். இதுவரை உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளாத குழந்தைகள்கூட இப்பொழுது குணமறிந்து நடந்து கொள்வர். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். புதிய வாய்ப்புகள் கைகூடிவரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் உத்தியோக உயர்வும் உருவாகலாம். அதே நாளில் சனி கொஞ்சம் வலிமையிழக்கிறார். எனவே, ஆரோக்கியத் தொல்லை, ஜீரணத் தொல்லை அதிகரிக்கும். நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

புதன் நவம்பர் 2 ஆம் திகதி துலாத்தில் சஞ்சரிக்கப் போகிறார். புத-ஆதித்ய யோகம் மற்றும் விபரீத ராஜயோகம் உருவாகிறது. எனவே விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. கல்விக்காக எடுத்த முயற்சி க்கைகூடும். நீண்ட நாட்களாக நிறைவேறாத காரியம் இப்பொழுது நிறைவேறும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 13இல் விருச்சிக ராசியில் சுக்ரன்



## மகரம்

வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உயர் அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். இம்மாதத்தில் மால்மருகன் வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். அஷ்டமாதிபதி நீச்சம் பெற்ற சனியோடு சேருவதால் நீச்ச பங்க ராஜயோக அடிப்படையில் ஒரு சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் தாமதமாகி முடியும். குடும்ப வருமானத்தை உயர்த்திக் கொள்ளப் புது முயற்சி எடுப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும் என்றாலும் மூன்றாம் நபர்களின் தலையீட்டால் இனம்புரியாத கவலை மேலோங்கும். மாதத்தில் கடைசி வாரத்தில் உங்கள் குழந்தைகளுக்கு உத்தியோகம் கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். சூரிய, சனி வழிபாட்டின் மூலம சொல்லைச் செயலாக்கிக் காட்ட இயலும்.

**(தொடரும்)**

## இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்!

உதவுவது குருவின் பார்வைதான். அதுவும் உச்சம் பெற்றுப் பார்க்கும் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மாங்கல நிகழ்ச்சிகள்

சாதத்தை காகத்திற்கு வைப்பதும் உகந்தது. வழிபாடுகள் உங்கள் வளர்ச்சியைக் கூட்டும். வருங்காலத்தையும் [illegible]


**சொந்த [illegible]**

சஞ்சரிக்கப் போகிறார். எனவே, தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் நிம்மதி [illegible]. உறவினர்கள் ஆதரவுக்கரம் [illegible] வெள்ளி போன்றவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாய மனிதன் க்ரிஃபின்!



சுட்டி







மாய மனிதனைத் தாக்கப் பாய்ந்து வந்த பொலிஸ்காரரை...







- 425 - மூன்றாம் வலன்டீனியன் ஆறாவது அகவையில் உரோமப் பேரரசன் ஆனான்.
- 1707 - பெரிய பிரித்தானியாவின் முதல் நாடாளுமன்றம் கூடியது.
- 1870 - பிரான்சின் மெட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற இறுதிப் போரில் ரஷ்யா வெற்றியடைந்தது.
- 1911 - முதற்தடவையாக வானூர்தி ஒன்று போரில் பாவிக்கப்பட்டது. இத்தாலிய வானோடி லிபியாவிலிருந்து புறப்பட்டு துருக்கிய இராணுவ நிலைகளை அவதானித்தான்.
- 1915 - நியூயோர்க் நகரில் 25,000-33,000 பெண்கள் வாக்குரிமை கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- 1917 - லெனின் அக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: மிகப்பெரும் கடற்படைப போர் பிலிப்பீன்சில் ஆரம்பமாயிற்று.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத்தின் செம்படைகள் ஹங்கேரியை அடைந்தன.
- 1973 - சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம் பெற்ற யோம் கிப்பூர் போர் ஐ.நாவின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்தது.
- 1989 - கம்யூனிச ஹங்கேரியன் மக்கள் குடியரசு, ஹங்கேரியன் குடியரசு எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1991 - ஈழப்போர்: தமிழீழப் போரில் அநாதைகளான பெண் பிள்ளைகளின் மறுவாழ்வுக்காக செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1998 - இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டனியாகு மற்றும் பாலஸ்தீன தலைவர் யாசர் அரபாத்துக்கும் இடையில் "அமைதிக்கான நிலம்" என்ற உடன்பாடு எட்டப்பட்டது.
- 2001 - அப்பிள் நிறுவனத்தின் ஐப்பாட் வெளியிடப்பட்டது.
- 2006 - இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

### பிறப்புகள்

- 1920 - ஃவுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (இ. 1998)
- 1948 - எம். எச். எம். அஷ்ரப், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தாபகர் (இ. 2000)

### இறப்புகள்

- கி.மு 42 - மார்க்கஸ் புரூட்டஸ், உரோமப் பேரரசின் படைத தலைவன் (பி. கிமு 85)
- 1986 - எட்வேர்ட் அடெல்பேர்ட் டொய்சி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1893)




(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



102

...மாறாக மும்பையின் நிலேஷ் குல்கர்னி வேண்டும் என்று சச்சின் கேட்டார். சச்சினுக்கு மும்பை மண் பற்று என வாரிய உறுப்பினர்கள் கருத பாவம் சச்சின் வேண்டாத மருமகள் செய்தாலும், செய்யாவிட்டாலும் குற்றம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டார்.

எப்படியோ கடைசியில் அசார் அணியில் இடம்பெறவில்லை. இருந்தும் இல்லை என்றால் பெரும் தொல்லை. இல்லாமல் போனால் விட்டது கவலை என்று கண்ணதாசன் எழுதியதுபோல் அசார் அணியில் இருந்து கொண்டே கழுத்தறுப்பதைவிட இல்லாமல் போவது எவ்வளவோ மேல் என்று சச்சினும் கபிலும் சமாதானமடைந்தனர்.

டீன் ஏஜ் பருவத்தில் புத்தம் புது மலராக சச்சினைப் பார்த்து ரசித்த ஆஸ்திரேலியர்கள் இன்றைக்கு உலகத்தின் முன்னணி கிரிக்கெட் வீரராக, பழுத்த அனுபவசாலியாக சச்சின் ஆடப்போகும் ஆட்டத்தைக் காணக் குவிந்திருந்தார்கள். பிராட்மென் கிரிக்கெட் உலகின் சின்னம் மட்டுமல்ல. ஆஸ்திரேலிய நாட்டின் சின்னம்கூட என்று கூறத்தக்க அளவிற்கு ஆஸ்திரேலியர்கள் அவர் மீது உயிரையே வைத்திருந்தார்கள். அப்பேர்ப்பட்ட பிராட்மெனின் மனம் கவர்ந்தவர் சச்சின் என்பதால் இயற்கையாகவே சச்சினை ஆஸ்திரேலியர்களுக்கு பிடித்துப் போனதில் வியப்பேதும் இல்லை.

இப்படி ஒரு விபரீதமான உட்கருத்து இருக்கும் என்பதைக் கனவிலும் நினைக்காத சச்சின் அதற்காக ரொம்பவே நொந்து போனார். தன் மீது ஒரே நேரத்தில் பூக்களும் கற்களும் வீசப்பட்டதை எண்ணி சச்சின் சிரித்துக் கொண்டே அழுதார்.

இந்தியர்கள் தங்கள் வாரிசுகளுக்குத் தனக்குப் பிரியமான அரசியல்வாதிகள் அல்லது சினிமா நட்சத்திரங்கள் பெயர்களை வைத்து அழகு பார்ப்பது சாதாரணமான ஒன்று. இதற்கு சச்சின் குடும்பம்கூட விதிவிலக்கு இல்லை. தேவ்பர்மன் என்ற புகழ்பெற்ற இந்திய இசை அமைப்பாளர் நினைவாகத்தான் சச்சின் என்று இவருக்கே பெயர் சூட்டினார்கள். இந்தியாவில் உள்ள பல பெண் குழந்தைகளுக்கு இந்திரா என்று பெயர் சூட்டப்பட்டதுகூட முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாகத்தான். ஆனால், ஒரு ஆஸ்திரேலியர் தன்னுடைய குழந்தைக்கு சச்சின் என்று பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார் என்றால் சச்சின் எந்த அளவிற்கு நாடு, மொழி, இனம் என்னும் வேற்றுமைகளைக் கடந்து ஆஸ்திரேலியர்களின் மனதைக் கவர்ந்திருக்கிறார் என்பதற்கு வேறு உதாரணம் தேவையே இல்லை. அடிலைட் நகரில் உள்ள இவான் வோயிட் என்பவர் தீவிர கிரிக்கெட் பிரியர். அதைவிட சச்சின் ரசிகர் என்றால் இன்னும் பொருத்தமாக இருக்கும். இவர் தனது மகனுக்கு தனது ஆத்மார்த்த கிரிக்கெட் வீரர் சச்சின் பெயரைத் தன் குடும்பப் பெயருடன் இணைத்து சச்சின் வோயிட் என்று பெயரிட்டுள்ளார்.

## ஆஸ்திரேலிய குழந்தைக்கு சச்சின் பெயர்!



இந்தச் சிறுவன் சச்சின் வோயிட் தனது ஹீரோ சச்சின் டெண்டுல்கரை சந்திக்க மூன்று மணி நேரம் காத்திருந்தான். தன் பெயரை ஆஸ்திரேலியர் ஒருவர் தன்னுடைய மகனுக்கு வைத்திருக்கிறார் என்று செய்தி கேட்டு சச்சினால் ஒருசில விநாடிகள் எதுவுமே பேச முடியவில்லை. கண்களில் ஆனந்தக்கண்ணீர் வழிந்தோட அந்த ஏழு வயது சிறுவனை வாரி அணைத்துக்கொண்டு முத்தமாரி பொழிந்தார். அவன் கையில் வைத்திருந்த சின்னஞ்சிறு சிறிய பேட்டில் கீப் ஸ்மைலிங் என்று கையெழுத்திட்டுக் கொடுத்தார். ஆஸ்திரேலிய ரசிகரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அடிலைடில் நடைபெற்ற முதல் டெஸட் போட்டி சச்சினுக்குச் சோதனையாகவே அமைந்தது. ஆஸ்திரேலியா குவித்த 441 ரன்களை இந்தியா துரத்த வேண்டிய கட்டாயம். முதல் இன்னிங்சில் சச்சின் மட்டையில் படாமல் சென்ற பந்தை காட்ச் பிடிக்க அதை அவுட் என்று அம்பயர் ஹார்பர் அறிவித்தார்.

(தொடரும்)

**கே. ரமேஷ்**

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

...இவையெல்லாம் உண்மையிலிருந்து தப்பிச் செல்வதற்கான வழிகள்!

ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்; உங்கள் உள்ளார்ந்த இயல்பே அன்புதான். அன்பு சாஸ்வதமானது. மற்ற எல்லா உணர்ச்சிகளும் வெறுமனே வரும், போகும், அவ்வளவுதான். நீங்கள் மற்ற எல்லா உணர்ச்சிகளும் உண்மைதான் என்ற எண்ணத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அவைகள்தான் அன்பை அழிக்கின்றன. அன்பை ஒருபோதும் அழிக்க முடியாது. அன்பை அழிக்க முடியுமானால், அது வெகு காலத்திற்கு முன்பே அழிந்து போயிருக்கும்.

நீங்கள் உண்மையிலேயே நேசிப்பீர்களானால், எதிர் உணர்ச்சிகள் உங்களுக்குள் நுழைய முடியாது. அவைகள் வெறுமனே ஒதுக்கப்பட்டுவிடும்; ஒரு அறையில் பிரகாசமான ஒளி இருக்கும்பொழுது இருளை உள்ளே கொண்டுவர முடியுமா? முடியாது! ஒளியின் பிரகாசத்தை மங்கச் செய்யும் பொழுதுதான், இருள் நுழைய முடியும். அதே வகையில், உண்மையான அன்பு உங்களிடம் நிகழாத வரையில் தான், மற்ற உணர்ச்சிகள் ஆக்கிரமிக்கும்! நீங்கள் அன்பால் தளும்பிக் கொண்டிருக்கும் பொழுது வேறு உணர்ச்சிகள் நுழைய வழியே இல்லை. இந்த சக்கரம் - அனாஹத சக்கரம்- உங்களை அன்பால் தளும்பச் செய்ய வேண்டும். ஏனெனில் அது பொங்கிப் பிரவ



கிக்கும். சக்தியூட்டும் அன்பான சக்தியாகும். நீங்கள் அனுபவித்திருக்கலாம்; நீங்கள் தீவிரமாக எதையாவது செய்தால் உங்களை மறந்துவிடுவீர்கள். உங்கள் வாழ்க்கையில் இதை நீங்கள் பலமுறை அனுபவித்திருப்பீர்கள். நீங்கள் செய்வது எதுவாயினும் இருக்கலாம். அது வண்ணம் தீட்டுதல், ஓவியம் வரைதல், படித்தல் அல்லது இதுபோன்று ஏதாவது எளிமையான ஒன்றாகக் கூட இருக்கலாம். அதனுள் ஆழமாகச் செல்லும் பொழுது நீங்கள் உங்களை மறந்து விடுவீர்கள். தீவிரமான தலைவலி இருக்கும்பொழுது உங்களுக்குப் பிடித்தமான, ஏதாவதொன்றை ஆழ்ந்து செய்யுங்கள்; உங்கள் தலைவலி பறந்துவிடும். பாருங்கள், நீங்கள் தொடர்ந்து உங்கள் தலையை கவனத்தில் வைத்துக் கொண்டேயிருப்பதால்தான் உங்கள் தலைவலியும் தொடர்ந்து உங்களைத் தொந்தரவு செய்கிறது. நீங்கள் ஏதாவதொன்றில் ஆழ்ந்து உங்

**ஆன்மீகம் 52**

கள் தலையை மறக்கும் கணத்தில் உங்கள் தலைவலியும் மறைந்து விடுகிறது. உங்கள் தலை உங்கள் தலைவலியும் மறைந்து விடுகிறது. உங்கள் தலை உங்கள் ஞாபகத்தில் இருக்கும் வரைதான் உங்கள் தலைவலி இருக்கும். நீங்கள் ஏதாவதொரு உணர்ச்சியில் ஆழ்ந்து செல்லும்பொழுது அந்த உணர்ச்சி மட்டுமே இருக்கும். நீங்கள் இருக்க மாட்டீர்கள். இதைத்தான் நாம் முழுமை என்று சொல்கிறோம். அதேபோன்று, நீங்கள் அன்பால் தளும்பிக் கொண்டிருக்கும்போது உங்களை உணரமாட்டீர்கள், அன்பை மட்டுமே உணர்வீர்கள்; (தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்படுமா துஞ்சும் புலி இடறிய சிதடன் கதி?



முதலில் இந்தியையும் படிப்படியாக சமஸ்கிருதத்தையும் மத்திய அரசின் ஆட்சிமொழியாக்கி இந்தியாவின் பிற தேசிய மொழிகளை அடிமைப்படுத்தும் முயற்சியை பா.ஜ.க. அரசு தொடங்கி வைத்துள்ளது.

மத்திய அரசின் சமூக வலைத்தளங்களில் அலுவல் ரீதியான ஆணைகளை தெரிவிக்கும்போது ஆங்கிலத்தோடு இந்தியையும் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்ற உத்தரவு வெளியிடப்பட்டது.

இப்போது அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் மத்திய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் பட்டப்படிப்புகளில் ஆங்கிலத்துடன் இந்தியும் முக்கியப் பாடமாக கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தொடர் வண்டித்துறை, பொதுக் காப்பீட்டுத் துறை போன்றவற்றில் வேலை பார்க்கும் ஊழியர்கள் அனைவரும் கண்டிப்பாக இந்தி கற்றாக வேண்டும். இத்துறைகளின் சார்பில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், அறிவிப்புகள் ஆகியவை இந்தி மொழியில் மட்டுமே வெளியிடப்பட வேண்டும்" என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த செப்டம்பர் 14 ஆம் திகதியன்று "இந்தி நாள்" விழாவில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தனது உரையில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இந்திய மக்கள் தொகையில் 55 சதவிகிதம் பேர் இந்தி பேசுகின்றனர். 85 முதல் 90 சதம் பேர் இந்தியைப் புரிந்து கொள்கின்றனர். தங்கள் தாய்மொழி வேறாக இருந்தாலும்கூட, அவர்கள் இந்தியை சுலபமாகப் புரிந்துகொள்கின்றனர். இந்தி இந்த நாட்டின் பொதுமொழியாகும் அனைத்து இந்திய மொழிகளின் தாய் சமஸ்கிருதம். மற்ற மொழிகள் அதிலிருந்து தோன்றியவை" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதே விழாவில் பேசிய இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி" நாட்டில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள 21 மொழிகளிலும் இந்திக்கு முக்கிய இடமுண்டு. அனைத்து இந்திய மொழிகளும் ஆறுகள் என்றால் இந்தி கடல் போன்றது" என்று கூறியுள்ளார். வங்க மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பிரணாப் முகர்ஜி அவர்கள் வங்கத்தின் தலைசிறந்த கவிஞரும், நோபல் பரிசு பெற்றவரும், சிறந்த இலக்கியவாதியுமான மறைந்த இரவீந்திர நாத் தாகூர் கூறிய கருத்துக்கு எதிர்மாறாக கூறியிருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

இந்திய விடுதலைப் போராட்டம் நடைபெற்ற காலத்திலேயே இரவீந்திரநாத் தாகூர் "எனது தாய்மொழியான வங்க மொழியே இந்தியாவின் ஆட்சி மொழியாக விளங்க தகுதி படைத்தது" என்று கூறியுள்ளார். வங்காளியான பிரணாப் இதை மறந்தது ஏன்?

ராஜ்நாத்சிங் இந்தி மொழி பற்றி கூறியதில் கொஞ்சமும் உண்மையில்லை.

இந்திய மக்கள் தொகையில் 30 சதவிகிதம் பேர் மட்டுமே இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். அதிலும் இந்தி என்ற பெயரில் பிற வட்டார மொழிகளையும் சேர்த்தே இந்தக் கணக்கு கூறப்படுகிறது.

இந்தியாவின் துணைப் பிரதமராக இருந்த எல்.கே. அத்வானி 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் திகதியன்று நாடாளுமன்ற மேலவையில் உரையாற்றும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இராஜஸ்தானி, மைதிலி, போஜ்புரி மற்றும் சில மொழிகள் தனித் தனி மொழிகளாகும். எனவே அரசியல் சட்டத்தின் 8ஆவது தொகுப்பில் இந்த மொழிகளை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை வற்புறுத்தப்படுகிறது. அவ்வாறு இந்த 35 மொழிகளை நாம் 8ஆவது தொகுப்பில் சேர்ப்போமானால் இந்தி பேசும் மக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து போகும். எனவே அவ்வாறு செய்வது இயலாது" என்று கூறியுள்ளார். அத்வானி ஒப்புக்கொண்டபடி பார்த்தால் 35 மொழிகள் தவறாகவும், வேண்டுமென்றும் இந்தியுடன் சேர்த்துக் கணக்கிடப்பட்டு இந்தி பேசுவோரின் எண்ணிக்கைக் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தி - திடுக்கிடும் உண்மைகள்

இந்தி என்ற சொல்லே பாரசீக சொல்லாகும். இந்தியாவுக்கு முகலாயர்கள் வந்த பிறகே இந்தியின் வரலாறு தொடங்குகிறது. அதாவது நவீன இந்தி மொழியின் வயது 500 ஆண்டுகள் மட்டுமே.

முகலாயர்கள் இந்தியாவைக் கைப்பற்றியபோது வட இந்தியாவில் கரிபோலி, பிரஜ்பாசா, பண்டேலி, கனொவுஜி, அவாதி, மகதி, மைதிலி, போஜ்புரி, பாகேலி, சட்டீஷ்காரி மற்றும் பல வட்டார மொழிகள் வழங்கி வந்தன.

வட்டார மொழியாக இருந்த கரிபோலியுடன் சமஸ்கிருதக் கலப்பு ஏற்பட்டபோது பிறந்த மொழி இந்தியாகும். அதே கரிபோலி மொழியுடன் பாரசீக கலப்பு ஏற்பட்டபோது பிறந்த மொழி உருதுவாகும்.

1800 ஆம் ஆண்டு வாக்கில்தான் இந்தி மொழியில் இலக்கியங்கள் தோன்றத் தொடங்கின. இந்த உண்மையை இந்தியாவின் முதல் பிரதமரான ஜ"வஹர்லால் நேரு ஒப்புக்கொண்டிருக்கிறார். 1959 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பேசும்போது "இந்தியாவின் மற்ற மொழிகளைவிட இந்தி சிறந்தது என நான் ஒருபோதும் கூறமாட்டேன். இந்தி மொழியில் இருப்பதைவிட சிறந்த இலக்கிய வளம் நிறைந்த இந்திய மொழிகள் பல உண்டு. தமிழ், வங்காளி, மராட்டி போன்ற மொழிகளைவிட இந்தி உயர்ந்தது என்ற நிலையில் நாம் இந்தியை அணுகவில்லை" என்று கூறினார்.

1961 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்தியாவின் 1552 மொழிகள் பேசப்படுவதாக கண்டறியப்பட்டது. இந்தி மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 30 சதவிகிதம் மட்டுமே.

ராஜ்நாத் சிங் கூறியுள்ளபடி 55 சதவிகித மக்கள் இந்தி பேசுபவர்களாக இருப்பதை ஒப்புக்கொண்டாலும்கூட, இந்தியா முழுவதிலும் பரவலாக இம்மொழி பேசும் மக்கள் இருக்கவில்லை. உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார் ஆகிய நான்கு மாநிலங்களோடு இம்மொழி பேசும் மக்கள் அடங்கியுள்ளனர். அதிலும் போஜ்புரி, மைதிலி, இராஜஸ்தானி போன்ற மொழிகளையும் இந்தியோடு சேர்த்துத் தான் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் பிற 29 மாநிலங்களில் இந்தி பேசுவோர் இல்லை. இந்தியைவிட இலக்கிய வளம் நிறைந்த மொழிகளை அவர்கள் பேசுகிறார்கள். எனவே இந்தியாவின் பொது மொழியாக இந்தியை ஏற்க வேண்டுமெனக் கூறுவது ஏற்க முடியாததாகும்.

இந்த உண்மையை இந்திய சுதந்திரப் போராட்டக் காலத் தலைவர்களில் ஒருவரும், இந்தியாவின் கவர்னர் -ஜெனரலாக இருந்தவருமான இராஜாஜி "இந்தி மொழி பேசுபவர்கள் வடக்கே உள்ள 3 அல்லது 4 மாநிலங்களில் மட்டுமே இருக்கிறார்கள். ஆனால், 5இல் 3 பகுதி இந்திய மக்கள் இந்தி பேசாத மக்களாகும" என்று கூறியுள்ளார்.

இந்தியாவின் துணைப் பிரதமராகப் பதவி வகித்த தேவிலால் நாடாளுமன்றத்தில் இந்தியில் பதில் கூறுமாறு வற்புறுத்தப்பட்டபோது "தன்னால் இந்தியில் பேச இயலாது, ஆனால் என்னுடைய தாய் மொழியான ஹரியான்வியில் மட்டுமே பேச முடியும்" என்று கூறினார்.

எனவே, பெரும்பான்மையோர் பேசும் மொழி என்று கூறி இந்தியை மற்ற மொழியினர் மீது திணிக்கும் முயற்சிக்குக் கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது. ஏற்கனவே இந்தித் திணிப்புப் போராட்டத்திற்குத் தமிழகம் வழி காட்டியுள்ளது.

1937 ஆம் ஆண்டில் இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் ஆட்சி சென்னை மாகாணத்தில் ஏற்பட்டிருந்தபோது இந்தியை எதிர்த்து தமிழறிஞர்களும், தமிழர் தலைவர்களும் பெரியார் ஈ.வே.இராமசாமி தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இப்போராட்டத்தில் கைதான நடராஜன், தாளமுத்து ஆகியோர் சிறையில் உயிரிழந்தனர். இந்தப் போராட்டத்தின் விளைவாக கட்டாய இந்தி ஆணை திரும்பப் பெறப்பட்டது.

26-11-1965 ஆம் நாளிலிருந்து இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியே இருக்கும் என்னும் அரசியல் சட்டத்தின் 243 ஆம் விதியை திருத்த வலியுறுத்தி தமிழகத்தில் வரலாறு காணாத வகையில் இந்தி எதிர்ப்புப் போர் மூண்டது.

இந்த மொழிப்போருக்குத் தான் முதன் முறையாக இராணுவம் வரவழைக்கப்பட்டு, கொந்தளித்த மாணவர்களும் மக்களும் சுட்டு வீழ்த்தப்பட்டகொடுமை நிகழ்ந்தது. கோவை, குமாரபாளையம், வெள்ளக்கோயில், திருப்பூர், கரூர், மணப்பாறை முதலிய 40 ஊர்களுக்கு மேல் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் சிவகங்கை இராசேந்திரன் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார். கீழப்பழுவூர் சின்னச்சாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், கீரனூர் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன், சத்தியமங்கலம் முத்து, மயிலாடுதுறை சாரங்கபாணி ஆகியோர் தீக்குளித்து தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தனர். விராலிமலை சண்முகம், கோவை பூளைமேடு தண்டபாணி ஆகியோர் நஞ்சுண்டு உயிர்நீத்தனர்.

தமிழகம் இன்னும் இந்திக்கு எதிராக தகித்துக் கொண்டிருக்கிறது. எரிமலை தூங்குகிறது என நினைப்பது மடமை. எரிமலை பொங்கி எழுந்து வெடித்தால் இந்தி ஆதிக்கம் பொசுங்கிப்போகும்.

ராஜ்நாத்சிங் போன்றவர்கள் இந்த உண்மையை உணர வேண்டும். இல்லையேல் தூங்கும்புலியை இடறிய குருடனின் கதியே ஏற்படும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணத்திற்கு பொருத்தமான மணமகன் எங்களிடம் உள்ளார்

## சிங்கள பௌத்த துறவிகளின் கடும்போக்கு அமைப்பான பல சேனாவின் செயலாளர் ஞானசார தேரர் தெரிவிப்பு



**ஜனாதிபதித் தேர்தல் என்ற திருமணத்திற்கு பொருத்தமான மணமகன் எம்மிடம் இருக்கின்றார். சரியான தருணத்தில் எமது மணமகனை களமிறக்குவோம் என தெரிவித்த பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொது பலசேனா வேட்பாளர்களை களமிறக்கும் என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொதுபலசேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ஞானசாரதேரர் சிங்கள பௌத்தர்களை பாதுகாக்கும் ஒருவரே நாட்டின் தலைவராக வர வேண்டும்.

அதை விடுத்து தேர்தல் காலங்களில் உறுதி மொழிகளை வழங்குவதும் உடன்படிக்கைகளை செய்து கொள்வதும் ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் உறுதி மொழிகளை காற்றில் பறக்கவிடுபவர்கள் எமக்குத் தேவையில்லை.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் என்ற திருமணததிற்கு பொருத்தமான மண மகனை நாம் தயார்படுத்தி வைத்துளளோம். அந்த மணமகன் யாரென்பதை தகுந்த நேரத்தில் அறிவிப்போம். அதுவரையில் அது பரம இரகசியமாகும்.

**பொதுத்தேர்தல்**

நாட்டில் தேர்தல் திருவிழா ஆரம்பித்து விட்டது. ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்த பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

இத்தேர்தலில் திறமையான படித்த நாடு மீது பற்றுக் கொண்ட எமது வேட்பாளர்களை களமிறக்குவோம்.

அவ் வேட்பாளர்கள் நிச்சயமாக பௌத்த குருமார்களாக இருக்கமாட்டார்கள் என்பது தொடர்பில் உறுதியளிக்கின்றோம். தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எமது நாட்டுக்கு எதிராக தமிழ் பிரிவினைவாதமும் முஸ்லிம் அடிப்படைவாதமும் தலைதூக்கி வருகின்றது.

இதனை அழித் தொழிப்பதற்கான போராட்டத்திற்கு நாம் முன்னுரிமை கொடுத்து செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# விடுதலைப்புலிகள் மீதான தடை நீங்க மகிந்த அரசாங்கமே முழுக்காரணம்

## ஐ.தே.க. எம்.பி சுட்டிக்காட்டு


(கொழும்பு)

அரசாங்கத்தின் தவறு காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளுக்கு விதித்திருந்த தடையை நீக்கியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நீதமன்றத்தின் உத்தரவிற்கு அமையவே ஐரோப்பிய ஒன்றியம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. எனினும் இந்த வழக்கில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வித மான வாதங்களும் முன்வைக்கப் படவில்லை. வழக்கு ஒன்று நடக்கும் பொழுது ஏதேனும் தீர்ப்பொன்றினால், நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுமாயின் வெளிவிவகார அமைச்சு, தூதுவர்கள், சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் ஆஜராக முயற்சிக்க வேண்டும். ஆனால், விடுதலைப் புலிகளின் தடை நீக்க வேண்டும் என்ற தீர்ப்பு வழாங்கப்படும் போது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவரும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அப்படியான இலங்கை அரசாங்கமே தவறு செய்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்பட்டமை தொடர்பில் ரணில் விக்ரமசிங்கவுக்கு சேறுபூசுவதை நிறுத்தி விட்டு, ஐரோப்பிய நீதி மன்றத்தில் மேன்முறையீடு ஒன்றை செய்து, புலிகளின் தடையை மீண்டும் அமுல்படுத்தும் முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (இ)

# சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டவே முயற்சி

## ஜனாதிபதி தேர்தல் குறித்து ஜே.வி.பி



நாட்டின் இன்றைய ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து நாட்டின் அரசியல் அமைப்பு, சட்டம், ஒழுக்கம், சம்பிரதாயங்கள், நீதிமன்றம் என அனைத்தையும் புறந்தள்ளி விட்டு சர்வாதிகார போக்கில் நாட்டை ஆட்சி செய்து வருவதாக ஜே.வி.பியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மகிந்த மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது சட்ட விரோத ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம் என்ற தலைப்பில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிராக ஜே.வி.பி நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது. இதன் ஆரம்பத்தில் பேசும் போதே அனுரகுமார திஸாநாயக்க இதனை கூறியுள் ளார். நடத்தப்பட முயற்சிக்கும் ஜனாதிபதித் தேர்தல் நாட்டுக்கு வெற்றியை தேடி கொடுக்கும் தேர்தல் அல்ல. ராஜபக்ஷ குடும்பமும் அந்த குடும்பத்தை சுற்றியிருக்கும் குடும்பங்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக நடத்த போகும் தேர்தல். தேர்தலை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சட்டரீதியாகவும் அரசியல் அமைப்பு ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் எந்த அதிகாரமும் இல்லை. இன வாத மற்றும் சர்வாதிகார ஆட்சியை நாட்டில் உறுதிப்படுத்த இவர்கள் முயற்சித்து வருகின் றனர். அரசியல் அமைப்புச் சட் டத்தை மீறுவது இவர்கள் இந்த முயற்சியை மேற் கொள்ள தலைப்பட்டுள்ளனர். இந்த முயற்சியை தோற்கடிக்க கட்சி, இன மத சாதி பேதமின்றி அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக் கின்றோம். அதில் ஒரு நடவடிக்கையே இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதை தடுக்க சகல சக்திகளையும் ஒன்றிணைந்து நாட்டில் பாரிய எதிர்ப்பை கட்டியெழுப்புவோம் எனவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். துண்டுப் பிரசுர விநியோக நிகழ்வில், ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், அரசியல் குழு உறுப்பினர்களான ராமலிங்கம் சந்திரசேகர், கே.டி லால் காந்த உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## புரந்தரதாசர்

கன்னட தேசத்திலே ஒரு இரத்தினக்கல் வியாபாரி இருந்தார். அவர் பெயர் நவகோடி நாராயணன். மிகவும் வசதி படைத்தவர். பெரிய கோடீஸ்வர பரம்பரையைச் சேர்ந்தவர்.

பணம்தான் அவரிடம் தாராளமாக இருந்ததே தவிர மனம் இல்லை.

அடுத்தவர்கள் ஒரு உதவி என்று வந்து கேட்டால் திரும்பிக்கூட பார்க்கமாட்டார். தான தர்மம் எதுவும் செய்யமாட்டார். மற்றவர்களையும் உதவி செய்வதற்கு விடமாட்டார். தடுத்து நிறுத்துவதில் சாலச் சிறந்தவர்.

அவரது மனைவி லஷ்மி அம்மாளுக்கு மிகவும் தாராள மனம்... யார் வந்து உதவி என்று கேட்டாலும் ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைப்பவர். இருந்தாலும் அந்த அம்மாவையும் எதுவும் செய்ய விடுவதில்லை. அவரது மனம் எப்போதுமே சங்கடப்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஒரு நாள் அந்த நவகோடி நாராயணன் தனது கடையில் இருந்து வியாபாரத்தை கவனித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் வயதான ஒருவர் அவர் முன்வந்து நின்றார்.

"ஐயா! என் மகளுக்கு திருமணம். மிகவும் சங்கடமாக இருக்கிறது. பணம் இல்லை. நீங்கள் ஏதாவது நிதி உதவி செய்தால் நலமாக இருக்கும்" என்றார்.

இவர் எப்படி கொடுப்பார்? "அதெல்லாம் ஒன்றும் இல்லை. சென்று வா..." என்றார். அந்தப் பெரியவர் இதைக் கேட்டதும் உடனே கடையை விட்டுப் புறப்பட்டார். நேராக நவகோடி நாராயணன் வீட்டிற்கு சென் றான்.

அங்கே அந்த அம்மா துளசி பூசை செய்து கொண்டிருந்தார். இந்தப் பெரியவர் தனது நிலைமையை எடுத்துச் சொல்லி உதவி கேட்டார். அந்த அம்மா இவரின் பரிதாப நிலையை அறிந்து தனது வைர மூக்குத் தியை கழற்றிக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டு அந்தப் பெரியவர் நேராக எங்கே போனார் தெரியுமா? நவகோடி நாராயணன் கடைக்கு வந்தார். இந்த மூக் குத்தியை வைத்துக் கொண்டு பணம் கொடுக்குமாறு கேட்டார். அவர் மூக்குத்தியை வாங்கிப்பார்த்தார்.

"என்ன இது? இது எங்களின் வீட்டு மூக்குத்தி மாதிரி தெரியுது...?" என்று சந்தேகப்பட்டார். "என்ன செய்யலாம்?" என்று யோசனை செய்தார்.

அந்த மூக்குத்தியை ஒரு பெட்டியிலே வைத்துப் பூட்டினார். "ஐயா சற்று இங்கே அமர்ந்திருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து நேராக வீட்டிற்கு சென்றார்.

"லஷ்மி இங்கே வா" என்று அழைத்தார். "எங்கே உன் மூக்குத்தி?" என்று கேட்டார்.

"இன்று எண்ணெய் தேய்த்துக் குளித்தேன். அது தான் கழற்றி வைத்திருக்கிறேன்" என்றார்.

"எங்கே வைத்திருக்கிறாய் எடுத்து வா பார்க்கலாம்" என்றார்.

அந்த அம்மாவிற்கு பயம் பற்றிக் கொண்டது. எதுவுமே செய்ய முடியவில்லை.

"துளசி அம்மனே! நீதான் துணை!" என்று வேண்டிக் கொண்டு பெட்டியைத் திறந்தாள்.

அங்கே பார்த்தால்... மூக்குத்தி இருந்தது. உடனே அதை எடுத்து கணவனிடம் கொடுத்தாள்.

நவகோடி நாராயணன் பார்த்தார். உடனே திரும்பிக் கடைக்கு வந்தார். அங்கே வந்து பார்த்தால் அந்தப் பெரியவரைக் காணவில்லை. பெட்டியிலே வைத்திருந்த மூக்குத்தியையும் காணவில்லை. அவருக்கு ஒரே ஆச்சரியம்.

மனைவி கொடுத்த மூக்குத்தியையும் மறுபடியும் எடுத்துப்பார்த்தார். அப்போது ஒரு காட்சி அதிலே தெரிந்தது. பாற்கடலிலே நாராயணன் ஆதிசேஷன் மேலே படுத்திருக்கிறார். எதிரிலே நாரதர் நிற்கிறார். அந்த நாரதர் தான் என்ற உணர்வு நவகோடி நாராயணனுக்கு ஏற்பட்டது. அவ்வளவுதான்! உடனே வீட்டை அப்படியே திறந்து விட்டு விட்டு மனைவியை அழைத்துக் கொண்டு பண்டரிபுரம் சென்றார்.

"போவதற்கு முன்னர் நமது சொத்துக்களையெல்லாம் ஏழை மக்களிடம் கொடுத்து விட்டுப் போவோம்" என்றார்.

"அப்படி செய்யக்கூடாது என்றார்" நாராயணன்.

"என்ன இது... முன்பு போலவே அப்படியே செய்கிறீர்கள்" என்றாள்.

"முன்பு அந்த சொத்து என்னுடையது என்று நினைத்தேன். அது இப்போது பண்டரிநாதனுடையது என்று தெரிந்து விட்டது" என்றார்.

அதனாலே அதை யாருக்கும் கொடுப்பதற்கு நமக்கு என்ன உரிமை? என்று கூறிவிட்டு புறப்பட்டார்.

அப்படி புறப்பட்ட நவகோடிநாராயணன்யார்என்று நினைக்கிறீர்கள்.

அவர்தான் பின்னாடி புரந்தரதாசரா மாறி நிறைய கீர்த்தனைகளையெல்லாம் எழுதினார்.

"சேர்! எங்கள் வீட்டுக்கார அம்மாவும் எண்ணெய் தேய்ப்பதற்காக மூக்குத்தியை கழற்றி ஒரு பெட்டியிலே வைத்தார். மறுபடியும் திறந்து பார்க்கும் போது அது காணாமல் போய் விட்டது" என்றார்.

"ஐய்யய்யோ அதன்பின் என்ன நடந்தது?" என்றேன்.

கடவுளை வேண்டினேன். மறுகணம் திடீரென அந்தப்பெட்டியிலேயே அது வந்துவிட்டது சேர்! என்றார்.

"இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்றேன்.

"எப்படி?" என்றேன்.

"அந்த மூக்குத்தியை நான்தானே எடுத்து அவசரத் தேவைக்கு அடகுக் கடையிலே வைத்திருந்தேன்" என்றார்.

அவர்–புரந்தரதாசர்
இவர்–மனைவிக்கு
நிரந்தரதாசர்.


தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடரும்

# குண்டுத்தாக்குதல்

## ஏமனில் 33 பேர் பலி



அரபு நாடான ஏமனில் கடந்த மாதம் தலைநகர் சானாவை ஹவ்தி பிரிவினர் கைப்பற்றியதை அடுத்து தொடர்ந்து அங்கு வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

உலகின் மிகப்பெரிய எணணெய் வளமிக்க இந்த நாட்டில் ஹவ்தி பிரிவினருக்கு எதிராக அல்கொய்தா அமைப்புடன் இணைந்த அன்சார் அல் ஷரியா என்ற அமைப்பினர் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்கு அல் பெய்டா மாகாணத்தில் உள்ள ரத்தா நகரில் தற்கொலைபடை தீவிரவாதி வெடிகுண்டுகள் நிரப்பிய காரில் சென்று உள்ளூர் அதிகாரி ஒருவரது வீட்டின் மீது மோதினார். அப்போது பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன. அந்தப் பகுதியே புகை மண்டலமாக மாறியது.

இந்த தாக்குதலில், 13 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். இதுகுறித்து அல்கொய்தா அமைப்பினர், ஹெய்தி அமைப்பின் தலைவர் வீட்டில் நடந்த கூட்டத்தை குறி வைத்து தாக்குதல் நடத்தியதாக கூறினர்.

மேலும், அங்கு அடுத்தடுத்து நடந்த தொடர் தாக்குதல்களில் 20 பேர் கொல்லப்பட்டனர். இதன்மூலம் ஒரே நாளில் நடந்த தாக்குதல்களில் அங்கு 33 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதல்கள் அனைத்தையும் அல் கொய்தா தீவிரவாதிகளே நடத்தி உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. (இ-5)

## ஜஎஸ்ஜஎஸ்ஸை ஒடுக்க ஆசியா உதவ வேண்டும் அமெ.கோரிக்கை

ஈராக் மற்றும் சிரியாவில் கணிசமான பகுதிகளை ஆக்கிரமித்துள்ள ஐ.எஸ்ஐ.எஸ தீவிரவாத அமைப்பை அழிப்பதற்கு ஆசிய நாடுகள் உதவ வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ. எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்காகவும், எபோலா வைரஸை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதற்காகவும் இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவுக்கு ஜோன் கெரி நேற்று முன்தினம் சென்றார். அந்நாட்டுத் தலைவர்களை அவர் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா, மலேசியா, புருனே, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளை ஜோன் கெரி சந்திக்கவுள்ளார். (இ-5)

## 2400 பேருக்கு மரண தண்டனை

### சீனாவில் சம்பவம்

(பீஜிங்)

சீனாவில் 2013 மட்டும் 2 ஆயிரத்து 400 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக மனிதவுரிமை அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

சீனாவில் உலகில் மிக அதிக அளவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டாலும், அந்த தகவல்கள் இரகசியமாகவே வைக்கப்படுகிறது.

எனினும் "துய் ஹுவா அறக்கட்டளை" என்ற மனித வுரிமை அமைப்பு இது தொடர்பாக புள்ளிவிபரங்களைக் கண்டறிந்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில், சீனாவில் கடந்த 2013 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 400 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் இது முந்தைய ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளைவிட 20 சதவீதம் குறைவுதான்.

மேலும் 2002 ஆம் ஆண்டில் 12 ஆயிரம் பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது, 2013ஆம் ஆண்டில் உலகின் பிறநாடுகள் அனைத்தும் நிறைவேற்றிய மரண தண்டனைகளின் மொத்த எண்ணிக்கை 778 என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஐ.நா.மனிதவுரிமை கவுன்சிலில் இந்தியாவிற்கு மீண்டும் வெற்றி

(சென்னை)

47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை கவுன்சிலில் இடம்பெற்றுள்ள இந்தியாவின் பதவிக்காலம் வரும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

இதனையொட்டி, 2015-17 ஆண்டுக்கான உறுப்பு நாடுகளை தேர்வு செய்ய நேற்று நடைபெற்ற அப்பதவிக்கான தேர்தலில் போட்டியிட்ட இந்தியா, மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. மூன்றாண்டுகளுக்கான இந்த பதவிக்கு வெளிப்படையான மற்றும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் நடத்தப்படுகின்றது.

ஒவ்வொரு தேர்தலின் போதும், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை கவுன்சிலுக்கு ஆசியாவைச் சேர்ந்த 4 நாடுகள் தேர்வு செய்யப்படலாம் என்ற சூழலில் இந்தியாவுடன் பங்காளதேசம், கட்டார், தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகள் இந்த பதவிக்கு போட்டியிட்டன.

இதில் இந்தியா மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை கவுன்சிலில் அங்கம் வகிக்கும் நாடுகள் உலகளாவிய அளவில் நடைபெறும் மனிதவுரிமை அத்துமீறல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமை கவுன்சிலின் கவனத்தை உடனடியாக ஈர்த்து, அவ்விவகாரம் தொடர்பாக விவாதித்து, தீர்வு காண உதவ முடியும்.

ஏற்கனவே, தொடர்ச்சியாக இருமுறை இந்தப் பதவியை வகித்த எந்த நாடும் மூன்றாவது முறை தேர்தல் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



உலக அமைதிக்காக கடந்த திங்களன்று இந்தியாவின் டில்லியிலுள்ள பாடசாலையில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இணைந்து யோகா நிகழ்வை நடத்தினர்.

## பாகிஸ்தானில் நீதித் துறைக்கு எதிரான நிகழ்ச்சிகளுக்கு தடை

### தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ஒரு கோடி ரூபா அபராதம்

பாகிஸ்தானில் நீதித் துறைக்கு எதிராக நிகழ்ச்சி நடத்திய தனியார் தொலைக்காட்சிக்கு 15 நாட்கள் தடை விதிக்கப்பட்டது. மேலும் அந்தத் தொலைக்காட்சிக்கு ஒரு கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் ஏஆர்ஒய் என்ற தொலைக்காட்சி செய்திகளை ஒளிபரப்பி வருகிறது. இதில் ஒளிபரப்பாகி வரும் "கரா சாச்" என்ற நிகழ்ச்சியை முபாஷர் லுக்மேன் என்பவர் தயாரித்து வருகிறார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் மூத்த நீதிபதிகள் குறித்தும், நீதித்துறையின் மாண்பையும் விமர்சித்ததாகப் புகார் எழுந்தது.

இந்நிலையில், லாகூர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்கு முறை ஆணையத்தின் சிறப்பு கூட்டம் இஸ்லாமாபாதில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அப்போது அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஆணைய அதிகாரிகள் பார்த்தபோது, பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்கு முறை ஆணையத்தின் விதிகளுக்கு எதிராக அந்த நிகழ்ச்சிகள் இருந்ததை கண்டறிந்தனர்.

இதையடுத்து அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கும், அதன் தயாரிப்பாளர் லுக்மேனுக்கும் தடை விதித்தனர்.

மேலும் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்புவதற்கும் தடை விதித்தது. அந்த நிகழ்ச்சியின் அறிவிப்பாளர் வேறு எந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் பங்கேற்க தடை விதித்தது. (இ-5)

## பிஸ்டோரியஸ்க்கு 5 வருட சிறை!

காதலி கொலை வழக்கில் பாரா ஒலிம்பிக் வீரர் ஒஸ்கார் பிஸ்டோரியஸ்க்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து தென் ஆபிரிக்க நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். தென்னாபிரிக்காவை சேர்ந்த பாரா ஒலிம்பிக் வீரர் ஒஸ்கார் பிஸ்டோரியஸ. மாற்றுத் திறனாளியான அவர் தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா நகரில் வசித்து வந்தார். இவரது காதலி ரீவா ஸ்டீன்காம்ப். கடந்த ஆண்டு காதலர் தினத்தின்போது பிஸ்டோரியஸ்ம் ரீவாவும் பிரிட்டோரியாவில் உள்ள வீட்டில் தூங்கியிருந்தனர்.

அன்றிரவு துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து ரீவா உயிரிழந்தார். பிஸ்டோரியஸ் அவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்து விட்டதாக பொலிஸார் குற்றம் சாட்டினர். இதனை மறுத்த பிஸ்டோரியஸ், வெளிநபர் குளியல் அறைக்குள் புகுந்து விட்டதாகக் கருதி தற்காப்புக்காக துப்பாக்கியால் சுட்டதாக தெரிவித்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தோகோஷில் மிஸிபா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கினார். அதில், காதலியை கொலை செய்த ஒஸ்கார் பிஸ்டோரியஸ்க்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து அவர் உத்தரவிட்டார். (இ-5)

# முற்றுகை போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது


பாகிஸ்தானில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் முறைகேடுகள் செய்து பிரதமர் நவாஸ் ஷெரிப் வெற்றி பெற்றதாக கூறி அவருக்கு எதிராக அந்நாட்டின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர், தெரிக் இ இன்ஸாப் கட்சித் தலைவருமான இம்ரான் கான் மற்றும் முஸ்லிம் மத குருவும், பாகிஸ்தான் அவாமி தெஹ்ரீக் கட்சியின் தலைவருமான தாஹிருல் காத்ரி ஆகியோர் போராட்டம் நடத்தி வந்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்கீழ் அடிமைப்பட்டுக்கிடந்த பாகிஸ்தான் விடுதலை அடைந்த தினமான க[illegible]ந்த ஒகஸ்ட் மாதம் 14 ஆம் தி[illegible] ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் இம்ரான்கான் மற்றும் தாஹிருல் காத்ரி தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள பாராளுமன்ற கட்டடம் அருகே முற்றுகை போராட்டத்தை தொடங்கினர்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் [illegible] தலைவர்களும் அறிவித்ததையடுத்து. பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதில் 8 பேர் சுடடுக் கொல்லப்பட்டனர். இந்நிலையில், கடந்த 67 நாட்களாக நடத்திவந்த பாராளுமன்ற முற்றுகை போராட்டத்தை முடித்துக்கொள்வதாக நேற்று முன்தினம் அறிவித்த தாஹிருல காத்ரி, தனது கட்சி தொண்டர்களை எல்லாம் தத்தமது வீடுகளை நோக்கிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

இவ்வளவு நாளாக நடைபெற்ற பாராளுமன்ற முற்றுகைப் போராட்டம், தற்போது நாடு தழுவிய பெரிய போராட்டமாக உருவெடுத்துள்ளது என்று தெரிவித்த காத்ரி, இன்று 23 ஆம் திகதி அபோட்டாபாத் நகரிலும், நவம்பர் 23 ஆம் திகதி பக்கர் நகரிலும், டிசெம்பர் 5 ஆம்தேதி சர்கோதா நகரிலும், டிசெம்பர் 14ஆம் திகதி சியால்கோட் நகரிலும், டிசெம்பர் 25 ஆம் தேதி கராச்சி நகரிலும் தங்களது போராட்டம் நடைபெறும் என்று அறிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிவருடிகளுக்கு அருகதையில்லை



## ஐக்கிய தேசிய கட்சியினர் மீது அமைச்சர் வாசுதேவ கடும் தாக்கு; புலிகள் மீதான தடை குறித்த பிரேரணை கண்டு கொள்ளப்படவில்லை

(கொழும்பு)

**இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை பற்றி பேசுவதற்கு ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடிகளான ஐ.தே.கவினருக்கு அருகதையில்லை எனக் கூறி நாடாளுமன்றத்தில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.**

ஐரோப்பிய ஒன்றியத்தில் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை உடனடியாக கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தி பாராளுமன்றத்தில் விசேட பிரேரணையொன்றை நிறைவேற்றி அதனை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்புவதற்காக பாராளுமன்றத்தில் விசேட அமர்வொன்றை கூட்டுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கையை முன்வைத்தது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒழுங்கு பிரச்சினையொன்றை எழுப்பிய ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாசவே விடுதலைப் புலிகள் மீதான தடையை வலியுறுத்தி பிரேரணையொன்றை எதிர்தரப்பும் ஆளுந்தரப்பும் இணைந்து நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் விசேட அமர்வை கூட்டுமாறு வலியுறுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை அங்குள்ள நீதிமன்றம் நீக்கியுள்ளது.

புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமன்றத்தின் தீர்ப்பை முடிவை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

புலிகள் மீதான தடை நீக்கம் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

அனைத்து கட்சிகளும் இணைந்து புலிகளுக்கு எதிராக மீண்டும் ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்க வேண்டுமென்பதை இந்தப் பாராளுமன்றத்தின் ஊடாக வலியுறுத்துவோம். ஐ.தே. கட்சி இலங்கையின் சுதந்திரம், ஐக்கியம் இறையாண்மைக் காக போராடிய கட்சி என்ற வகையில் புலிகள் மீது மீண் டும் தடையை கொண்டுவர வேண்டிய பாரிய பொறுப்பு ஐ.தே. கட்சிக்கு உள்ளது என்றார்.

**வாசுதேவ குறுக்கீடு**

சஜித் பிரேமதாச இவ்வாறு தனது உரையை தொடர்கையில் குறுக்கீடு செய்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சஜித் எம். பியுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

ஏகாதிபத்திய வாதிகளின் அடிவருடிகளான ஐ.தே.கவினருக்கு இலங்கையின் சுதந்திரம் இறையாண்மை தொடர்பாக பேசுவதற்கு அருகதையில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆவேசத்துடன் சுட்டிக்காட்டினார்.

இதனை எதிர்த்து சஜித் எம்.பி. அமைச்சரை அமருமாறு தெரிவித்ததோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

**சபாநாயகரின் பதில்**

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கும் சஜித் பிரேமதாச எம்.பிக்கும் இடையே கடும் வாதப் பிரதிவாதங்கள் சபைக்குள் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் குறுக்கிட்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இலங்கையின் சுதந்திரம் இறையாண்மையை பாதுகாப்பதற்கும் வெற்றி கொள்ளவும் தனி ஒரு கட்சி மற்றும் போராடவில்லை.

அக்காலத்தில் இலங்கையிலிருந்த அனைத்து கட்சிகளும் போராடின எனக் கூறி தர்க்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். இதன்போது, ஐ.தே. கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. ரோசி சேனாநாயக்க ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

சஜித் பிரேமதாஸவின் புலித்தடை தொடர்பாக பேச முற்பட்ட போது இது ஒரு ஒழுங்குப் பிரச்சினையல்ல என சபாநாயக்கர் தெரிவித்து அனுமதி வழங்க மறுத்தார். இறுதியாக சஜித் பிரேமதாசவின் பிரேரணை கோரிக்கை தொடரபில் சபாநாயகர் எந்தவொரு பதிலையும் வழங்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஞானச்சுடர் வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டு பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் வெளியீடு இடம்பெறவுள்ளது. (இ-3)

## மலாலா யூசுப்சாய்க்கு அமெரிக்காவில் உயரிய விருது

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் உயரிய விருதுகளில் ஒன்றான லிபர்டி விருது பாக். சிறுமி மலாலா யூசுப் சாய்க்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. பென்சில்வேனியாவில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மலாலா, விருதினை பெற்றுக் கொண்டு உரையாற்றிய போது கூறியதாவது.

சத்தமாக பேச முடியாதவர்களுக்காக நான் பேசுகிறேன். நான் துன்பப்படும் பெண்களுக்காக பேசுகிறேன். நான் ஏன் பேசக் கூடாது. நாம் நாட்டிற்காக நமது கடமையை செய்கிறோம். நமது பள்ளி செல்லும் உரிமைக்காக நான் குரல் கொடுக்கிறேன்.

போகா ஹாரம் தீவிர வாதிகள், பிடியில் உள்ள 200 இற்கும் அதிகமான பாடசாலை மாணவிகளை விடுவிக்க வேண்டும்.

லிபர்டி விருதுடன் தனக்கு வழங்கப்பட்ட 61 இலட்சம் ரூபாய் பணம்(1 இலட்சம் அமெரிக்க டொலர் ) வறுமையின் காரணமாக கல்வி பெற முடியாமல் தவிக்கும் பாகிஸ்தான் சிறுமிகளுக்கு நன்கொடையாக அளிக்கப்படும்.

சிறுவர்களுக்கான தனது போராட்டத்தை தொடர இந்த விருது உற்சாக மூட்டுவதாக அமையும். உலக அளவில் குழந்தைகளின் உரிமைகளுக்காக போராடுவேன்.

ஏனைய நாடுகள் ஆயுதங்கள் வாங்குவதற்கு செலவிடும் பணத்தை குழந்தைகளின் எதிர்காலத்திற்கு முதலீடு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். இந்த ஆண்டு அமைதிக் கான நோபல் பரிசு இந்தியாவை சேர்ந்த கைலாஷ் சத்யார்த் மற்றும் பாகிஸ்தானை சேர்ந்த மலாலா யூசுப் சாய் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## குடும்பப் பெண்ணை காணவில்லை

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி நாகர் கோவில் பகுதியில் உள்ள குடும்பப் பெண்ணொருவரை கடந்த 3 நாட்களாக காணவில்லை என அவரது கணவனால் நேற்று முன்தினம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 2 பிள்ளைகளின் தாயான கலியுகமூர்த்தி- சுகந்தி (வயது 36) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

இவர் கடந்த 20 ஆம் திகதி பருத்தித்துறையில் உள்ள தனது தோழியின் வீட்டுக்குச் சென்ற நிலையிலே இவ்வாறு காணாமற் போயுள்ளார். தோழியின் வீட்டுக்குச் சென்றவர் இரவாகியும் வீடு திரும்பவில்லை. கணவன் தோழியின் வீட்டுக்கு தொலைபேசி மூலமாக தனது மனைவி இதுவரை வீடு திரும்பவில்லை என கூறியுள்ளார். அதற்கு அவர்கள் உங்கள் மனைவி பிற்பகல் 1.30 மணியளவில் வீட்டுக்கு செல்வதாக கூறி போயுள்ளார் எனத் தெரிவித்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த கணவன் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார். அத்துடன் தனது மனைவி 27 பவுண் தாலிக்கொடி அணிந்து சென்றுள்ளார் எனவும் பொலிஸில் முறைப்பாட்டில் பதிவு செய்துள்ளார். இதனால் தனது மனைவியை யாராவது கடத்திச் சென்றிருக்கலாம் என சந்தேகப்படுவதாக கணவனால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-60)

## இராசி பலன்

23.10.2014
(ஐப்பசி 06, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 3.54 மணிவரை
சித்திரை பின்னிரவு 5.07 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
அமாவாசை விரதம், கேதாரகௌரி விரதம்

வளவன்

**மேடம்** – உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**இடபம்** – சுவாரஸ்யமான நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செய் தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** – பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர் தொடர்புகளால் நன்மையுண்டு, சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்** – தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** – உறவு,பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படைவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**கன்னி** – சுய முயற்சியின்மூலம் சுகம் காணவேண்டிய நாள், குல தெய்வ வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, போசன சுகமுண்டு.

**துலாம்** – உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக அலைய நேரிடலாம், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், ஆழ்ந்த சிந்தையுண்டு.

**விருச்சிகம்** – செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்புண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உறவினர் வருகையுண்டு.

**மகரம்** – விரதம், வழிபாடுகளில் அதிக நம்பிக்கை ஏற்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** – முன்னேற்றம் காண்பதற்கு முயற்சியெடுக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** – எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செயற்படுவது நல்லது, பிரயாண பயமுண்டு, திடீர் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயன்ஸ் கழகத்தின் இலவச கருத்தரங்கு

(நல்லூர்)

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது இலவச கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு அருகாமையில் லயன்ஸ் எஸ். சிறிக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 40 இற்கும் மேற்பட்ட





பயனாளிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடி, கோழி வளர்ப்பு தொடர்பான கருத்துக்கள் இடம்பெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகிழக்குப் பிரிவுச் செயலாளர் இ.மயில்வாகனமும் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி பிராந்தியப் பணிப்பாளர் ஏ.செந்தூரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் வங்கியில் கடன் பெற்று சுய தொழிலில் ஈடுபடுவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. (இ-7-134)




# தீபாவளி வாழ்த்து அட்டையினைக் கொடுத்து குடும்பப்பதிவு மேற்கொண்ட இராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

தீபாவளித்தினமான நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான இடங்களில் இராணுவத்தினர் குடும்பப்பதிவு நடவடிக்கைகளினை மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தின் இத்திடீர் நடவடிக்கையினால் தீபாவளித் திருநாளான நேற்றையதினமும் மக்களிடையே ஒருவித அச்ச உணர்வு ஏற்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் உள்ள வீடுகளிற்கு நேரில் சென்ற இராணுவத்தினர் பதிவு நடவடிக்கைகளினை மேற்கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு வீடுகளுக்கும் இரு இராணுவத்தினர் வீதமாக துவி ச்சக்கரவண்டியில் சீருடையில் சென்ற இராணுவத்தினரே இப்பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

வீடுகளிற்கு சென்ற இராணுவத்தினர் வீட்டாரிடம் தம்மால் அச்சிடப்பட்ட தீபாவளி வாழ்த்து அட்டையினை வழங்கிவிட்டு பதிவுகளினை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.பாதுகாப்பு படைகளின் தலைமையகம் மற்றும் 51 ஆம் படைப்பிரிவு போன்ற படைப்பிரிவினரே இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

செம்மஞ்சள் நிறம் கொண்ட அத்தீபாவளி வாழ்த்து அட்டையில் படையினரின் இலட்சனை பொறிக்கப்பட்டு தீபாவளி வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாழ்த்து அட்டையினைகொடுத்து விட்டு குடும்பத்தலைவரின் முழுப் பெயர் மற்றும் வீட்டு முகவரி என்பவற்றினையும் பதிந்து சென்றனர்.

இதேவேளை தமது வீடுகளிற்கு வந்த இராணுவத்தினர் நன்றாக தமிழில் உரையாடியிருந்தனர் என பொதுமக்கள் தெரிவித்தனர். (இ-4)

## தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள வல்வெட்டித்துறை வடமேற்கு J/388, வல்வெட்டித்துறை தென்மேற்கு J/391 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி 23 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளிற்கிணங்க தேசிய ரீதியாக சுனாமிக்கான ஒத்திகை நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது எனயாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (இ

## மருதங்கேணி-உடுத்துறைவரை செல்லும் வாரிவிட்டான்

# வீதியைப் புனரமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

யாழ்.பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட வடமராட்சி கிழக்கு மருதங்கேணி நாவலடிச் சந்தியிலிருந்து உடுத்துறை மகா வித்தியாலயம் வரை நீண்டு செல்லும் சுமார் 4 கிலோமீற்றர் நீளமான வாரிவிட்டான் வீதியானது பல வருடங்களாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

கடந்த கால யுத்தத்தின் பின்னர் மக்கள் மீண்டும் மீள்குடியேறியதன் பின்னர் என்றிப் திட்டத்தின் மூலம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வீதிப் புனரமைப்பிற்காக வீதிப்புனரமைப்பு ஒப்பந்தகாரர்களிடம் குறித்த வீதியானது ஒப்படைக்கப்பட்டது.

இதற்கமைய ஒப்பந்தகாரர்களால் வீதிப்புனரமைப்பு வேலைகளுக்காக வீதிப்புனரமைப்புப் பொருட்களும் வீதி ஓரங்களில் பறிக்கப்பட்டன.

எனினும்வீதிப்புனரமைப்புவேலைகள் உரிய காலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் குறித்த ஒப்பந்தமானது பருத்தித்துறை பிரதேச சபையினால் இரத்துச் செய்யப்பட்டது.

இதன்பின் இவ்வீதிப் புனரமைப்பு வேலைகள் எவையும் இடம்பெறவில்லை.

சில நாட்களுக்கு பின்னர் மீண்டும் குறித்த வீதிப்புனரமைப்பு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

ஆனால் மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் வீதிப்புனரமைப்பிற்கான ஏற்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை என அக்கிராம மக்கள் மற்றும் பொது அமைப்பினரால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்தவீதியானதுதினமும்பெருந்திரளான மக்கள் பயன்படுத்தும் வீதியாக காணப்படுகிறது.

மருதங்கேணியிலுள்ள அரச கரும நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச உத்தியோகத்தர்கள் பலர் இவ்வீதியூடாகவே தினந்தோறும் மருதங்கேணியைச் சென்றடைகின்றனர்.

ஏனெனில் மருதங்கேணி கடற்கரை வீதி முற்றுமுழுதாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து தரும்படி பல தடவை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் அரசியல் தலைவர்களிடமும் அரச உயர் அதிகாரிகளிடமும் மருதங்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம் உட்பட பல கிராம பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளபோதும் அவ்வேண்டுகோளை எந்தவொரு அரச அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ கவனம் செலுத்தவில்லை எனவும் குற்றஞ் சாட்டினர்.

இதனால் மீண்டும் பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளருக்கு இவ்வீதியினை புனரமைத்துத் தரும்படி கோரிக்கை ஒன்றை இக்கிராம மக்கள் விடுத்துள்ளதுடன் வீதிப்புனரமைப்பிற்காக வீதி யோரங்களில் பறிக்கப்பட்டுள்ள வீதிப்புனரமைப்பு பொருட்களை அகற்றிச் சீரான போக்குவரத்துக்கு உதவி செய்துதருமாறும் அக்கிராமமக்கள் தவிசாளரிடம் கேட்டுள்ளனர். (இ-7-64)

# அபிவிருத்தி மன்றம் நடத்தும் சிறுவர், முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சிறுவர், முதியோர் தின விழா நாளை மறுதினம் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மண் டபத்தில் சமூக அபிவிருத்தி மன்ற தலைவர் ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யு.என்.டி.பி நிறுவன நிகழ்ச்சித் திட்டப் பொறுப்பாளர் இராசநாயகம் சர்வானந்தாவும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் முகுந்தன் விஜயகுமாரியும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மகாபாரதம் தொடர்பில் தொடர் சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம் பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூசை திருவிழா முடிவுற்றதும் மகாபாரதம் பற்றிய தொடர் சொற் பொழிவை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பொன்.சுகந்தன் ஆற்றவுள்ளார். (இ-3)

# போக்குவரத்தை இலகுபடுத்துவதற்கு வாய்க்காலை புனரமைத்து தாருங்கள்

## மக்கள் கோரிக்கை



கரவெட்டி பிரதேச செயலகத்தின் கீழுள்ள இராஜகிராமத்தில் இருந்து கிராள் வயல் வரை அமைக்கப்பட்ட நீர் வழிந்தோடும் வாய்க்கால் வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குறித்த வாய்க்காலானது தற்போது பெய்து வரும் மழையினால் வெள்ளம் நிரம்பிக் காணப்படுகின்றது.

இதனால் வாய்க்காலைக் கடந்து அவ்வழியூடாக செல்லும் பலர் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், வியாபாரிகள் பொது மக்கள் என பலரும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் தினமும் இவ்வாய்க்கால் ஊடாக பாடசாலை சென்று வருகின்றனர்.


இதனால் அம்மாணவர்களது பாடசாலை சீருடை, காலணி என்பன மிகவும் சேதமடைந்த நிலையில் சென்று வருகின்றன. இவ் வாய்க்கால் சரியாக அமைக்கப்படாத காரணத்தினால் மழை காலங்களில் வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதாகவும் நீர் வழிந்தோடும் நிலையில் வாய்க்கால் அமைக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே மழை காலங்களில் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்ற குறித்த வாய்க்கால் சீர் செய்யப்படவேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் ஜாதகத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஜாதகத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாணந்துறை ஹொரோதுடுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் எந்தவொரு நன்மையையும் அளிக்கவில்லை. "மகிந்தவிற்கு முடியும் என" எல்லா இடங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளார்.

எனினும் நாம் நினைக்கின்றோம் மகிந்தவிற்கு மூன்றாம் தடவை போட்டியிட முடியாது என்று, போட்டியிட்டாலும் வெற்றியீட்ட முடியாது. தற்போது ஜனாதிபதி மகிந்தவின் ஜாதகத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் மக்கள் சிறந்த பாடமொன்றை அரசாங்கத்திற்கு கற்பித்தனர். இந்த அரசாங்கத்தில் அநேகமானவர்கள் ஊழல் பேர்வழிகள் என்பது மக்களுக்கு தெரியும்.

அன்று எங்களது படைவீரர்களை, பௌத்த பிக்குகளை கொலை செய்த கருணா அம்மானை ஜனாதிபதி தன்பக்கம் வைத்திருக்கிறார்.

எனினும் ஜனாதிபதி நாட்டை காட்டிக் கொடுக்கப் போவதில்லை என தெரிவிக்கின்றார். நாட்டின் பெரும்பகுதி சீனாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ குடும்பம் சொகுசு வாழ்க்கை அனுபவிக்கின்றது. நாட்டு மக்கள் துயரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மத்தள விமான நிலையம் அம்பாந்தோட்டை துறைமுகம் போன்றவற்றை சீனாவிற்கு வழங்க தற்போதே திட்டம் தீட்டப்பட்டுள்ளது

எனவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தீர்மானம் மிகவும் முக்கியமானதொன்றாகும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (இ-5)

# ரணிலுக்கு எதிரான சுவரொட்டிகள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான சுவரொட்டியை எடுத்துச் சென்ற துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான வாகனம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

டப்ளியூ.பி.சீ.ஏ என்ற இந்த வாகனத்தை அம்பாறை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் அதில் இருந்த துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களையும் கைது செய்துள்ளனர்.

வாகனத்தையும் ஊழியர்களையும் விடுவிக்குமாறு பொலிஸாருக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

மேலும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தினால் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சி தலைவருக்கு எதிரான நடவடிக்கைகள் கொழும்பில் தீவிரமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 |
| தக்காளி | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 60 | 50 |
| கோவா | 100 | 100 | 100 |
| கரட் | 80 | 110 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 60 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 70 |
| பாகற்காய் | 200 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 200 | 120 | 140 |
| லீக்ஸ் | 140 | 110 | 140 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 120 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 120 | 100 | 150 |

# மீனவர் மீதான தாக்குதல் குறித்து விசாரணை

மாளிகாவத்தையில் உள்ள மீன்பிடித்துறை அமைச்சின் முன்னால் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது மீனவர்கள் மீது கல்லெறி தாக்குதல்கள் நடத்தப்பட்டமை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.


இழுவைப்படகு உரிமையாளர் கடலில் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக கூறி நேற்று முன்தினம் அமைச்சின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டார்.

இதன்போது அமைச்சு அலுவலகத்தில் இருந்து மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் தம்மில் மூவர் காயமடைந்ததாகவும் மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தநிலையில் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் அரசாங்கத்துக்கும் தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை பயன்படுத்தி மீன்பிடித்துறை பிரதியமைச்சர சரத் குணவர்த்தன போனறோர் மீனவர்களுக்கு சார்பான கருததுக்களை வெளியிட்டு வருகின்றனர்(இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 171

ராகுலன் பாலா




பெருமாள் பிரகாஸ்



தமிழ்மதி மானசா



திருமணம் வேண்டாம்.. ஆனால் குழந்தை பெத்துக்கனும்– ஸ்ருதி


வா சுருதி போகலாம்...



சிவயோகநாதன் கிருஷாத்




கஜன் வினோ



கரோலின் கெனி

"என்னதான் நீங்க செண்டிமெண்ட் பார்த்தாலும் கப்பல் கிளம்புறத்துக்கு முன்னாடி எலுமிச்சம் பழம். எல்லாம் வைக்க முடியாது சங்கு ஊதிவிட்டுதான் கிளம்பனும்.."

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
## மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

வரலாறு பகுதி-II மூன்று மணித்தியாலம்

(நேற்றைய தொடர்ச்சி)..

✢ 1 ஆம் பகுதி வினா கட்டாயமாகும்.

✢ 2 ஆம் பகுதியிலிருந்து 3 வினாக்களுக்கும் 3 ஆம் பகுதியில் 2 வினாக் களுக்கும் விடை தருக.

✢ விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை 6 ஆகும்.

பகுதி 1

அ. 1. கீழே I இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கை வரைபடத்திலும் II இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உலக வரை படத்திலும் குறித்துப் பெயரிடுக.

1. ஜம்புகோளப்பட்டினம், கோணநதி, மகா நாகசூல, குருளுவாவி, டெல்ப், செங்கடகல (கண்டி) களுத்துறை, கொக்கிளாய், யாப்பகூவ, புத்தகால

2. மக்கா, பத்தேவியா, பனாமாக்கால்வாய், நைல்நதி, ஐஸ்லாந்து, டோக்கியோ, கோவா, கஸ்பியன்கடல்

ஆ. 1. கீழே A.B.C,G இல் குறிப்பிட்டுள்ள வரலாற்று ரீதியிலான தகவல்களுடன் தொடர் புடைய நபர்கள் யாரென்று உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A) அநுராதபுர நகரின் ஆட்சிக்காக நகர குத்திக பதவிக்கு பண்டு காபய மன்னரால் நியமிக்கப்பட்ட மன்னனின் மூத்த மாமா


B) இந்தியாவில் 4 ஆவது பௌத்த மாநாட்டை நடத்துவதில் தலைமை வகித்த மன்னன்

C) வெளிநாட்டு தொடர்புகளை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக 1 ஆம் விஜயபாகு மன்னர் மணமுடித்த கலிங்க இளவரசி

D) பாகிஸ்தான் என்ற பெயரில் தனிப்பட்ட இராச்சியமொன்றை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நபர்.

2.A,B இன் கீழ் தரப்பட்டுள்ள படங்களை பார்வையிட்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

A



1. இதில் A இல் உள்ள சிலை எக்காலத்துக்குரியது?
2. இந்த சிலை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
3. இலங்கையில் இந்த சிலை உள்ள விகாரையைப் பெயரிடுக?
4. அந்த விகாரையை செய்த மன்னரின் பெயரை எழுதுக?

3. B



1. B படத்தில் காணப்படும் நபரைப் பெயரிடுக?
2. இவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?
3. இவர் கீழைத்தேயத்திற்கு சென்றடைந்த நாட்டைக் குறிப்பிடுக?
4. இவரின் பிரயாணம் இரு நோக்கங்களைக் கொண்டது அதில் ஒன்றை எழுதுக?

பகுதி II

2. 1. தொல்பொருளியல் மூலாதாரங்களூடாக வரலாறு சார்ந்த தகவல்கள் உறுதிப்படுத்திக் கொள்ளப்படும். இதற்கு உதவும் தொல்பொருளியல் மூலாதா ரங்கள் 3 இனை எழுதுக.

2. கீழே தரப்பட்டுள்ள நான்கு கல்வெட்டுக்களில் எவை பற்றி விளக்கப்படுகின்றது என வெவ்வேறாக முறையே எழுதுக.

1. சங்கமுவ விகாரைக் கல்வெட்டு
2. பதுளை தூண்கல்வெட்டு
3. கொடவாய தூண் கல்வெட்டு
4. மிகிந்தலை சுவர்க் கல்வெட்டு

3. ''தேவநம்பிய தீசனின் ஆட்சிக்காலம் இலங்கை வரலாற்றில் ஒரு உன்னதமான காலமாகும்''

இதை அக்காலத்தில் நடைபெற்ற முக்கிய சம்பவங்கள் இரண்டினூடாக விளக்குக?

4. நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சியின் காரணமாக இலங்கை இராசதானி தென்மேற்கிற்கு இடம்பெயர்ந்தது. இவ்வாறு இடம்பெயர்வதற்கு தாக்கம் செலுத்திய 3 விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக?

3. 1. கீழ்வரும் வாவிகளை அமைத்த மன்னர்களை பெயரிடுக.

1. மின்னேரியா வாவி
2. யோதவாவி
3. கந்தளாய் வாவி

2. ஒரு குளத்தின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு, அவற்றின் செயற்பாடுகளை முறையே எழுதுக?

1. அலைதாங்கி (சலபனாவ)
2. சுருங்கை (சொரவ்வ)
3. வான் கதவு (பிட்டவான)
4. குள்க்கட்டு

3. தம்பதெனிய காலப்பகுதியில் முக்கியமான ஆட்சியாளரான 2 ஆம் பராக்கிரமபாகு மன்னரின் முக்கிய சேவைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

4. 6 ஆம் பராக்கிரமபாகு மன்னரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் அரசியல் துறையில் பல முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றில் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

4. 1. கி.பி. 1521 இல் விஜயபாகு கொள்ளையின் பின்னர் கோட்டை இராச்சியம் 3 இராச்சியங்களாகப் பிரிந்தது. அவற்றை எழுதுக.

2. கீழ்வரும் 4 வருடங்களும் இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற ஏதுவான காரணிகளை முறையே எழுதுக.

கி.பி. 1525
கி.பி. 1602
கி.பி. 1796
கி.பி. 1803

3. பிரித்தானியர்கள் இலங்கை மீது கவனம் செலுத்த ஏதுவான காரணிகள் பலவாகும். அவற்றில் இரண்டினை எழுதி விளக்குக.

4. கி.பி. 1818 இல் இலங்கையில் ஏற்பட்ட சுதந்திரப் போராட்டம் ஒரு தற்செயலான நிகழ்வல்ல. அதற்கு தாக்கம் செலுத்திய காரணிகளை 3 விடயங்களுக்கூடாக விளக்குக.

5. 1. பின்வரும் விடயங்களுடன் தொடர்புபட்ட நபர்களின் பெயர்களை முறையே எழுதுக.

✢ 1815 இல் மலையகத்தை ஆக்கிரமித்த ஆங்கில ஆளுநர்.

✢ 1833 கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் இலங்கையின் நீதி நடவடிக்கைகளை ஆராய நியமிக்கப்பட்ட நபர்.

✢ 1929 இல் மனுதாரர்களின் கோரிக்கைகளை மறுத்த ஆளுநர்.

2.நோர்த் ஆளுநரின் ஆட்சியில் இலங்கையில் இராஜகாரிய முறையை இரத்துச் செய்ய ஏதுவான காரணிகள் இரண்டினை எழுதுக.

3. டொனமூர் யாப்பு சீர்திருத்தத்தினூடாக இலங்கை மக்களுக்கு கிடைத்த நன்மைகள் இரண்டினை எழுதி விளக்குக.

4. பிரித்தானியர்கள் இலங்கைக்கு வந்த பின்னர் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக பாவித்த தந்திரங்கள் மூன்றினை எழுதி அவற்றை விளக்குக.

6. 1. கீழ்வரும் விடயங்களுடன் தொடர்புபட்ட நபர்களின் பெயர்களை முறையே எழுதுக.

✢ முதல் தடவையாக கம்பளை சிங்கபிட்டியில் கோப்பிச் செய்கையை ஆரம்பித்தல்

✢ கி.பி. 19 இல் நீர்ப்பாசன திணைக்களத்தை ஆரம்பித்தல்

✢ தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் தலைமைத்துவத்தை வகித்தல்

2.பின்வரும் நபர்களால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்புக்கள்/நிறுவனங்களை அவரவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடுக.

✢ ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்

✢ சேர் டி.பி. ஜயதிலக்க

✢ பொன்னம்பலம் இராமநாதன்

✢ எம்.சீ. சித்திலெப்பை

3. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களின் சேவைகள் இரண்டினை விளக்குக.

4.இலங்கையின் கல்வித் துறைக்கு C.W.W கன்னங்கரா விலை மதிக்க முடியாத சேவையை செய்துள்ளார். இதனை அவரின் மூன்று சேவைகளூடாக விளக்குக.

பகுதி III

7. 1. மத்திய ஆசியாவில் ஸ்ரெப்பீஸ் புல்வெளியில் இருந்த ஆரியர்கள் சென்ற நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

2. வைதீக யுகத்தின் பின் இந்தியாவில் ஏற்பட்ட பிரதான வர்ணங்கள் நான்கினை எழுதுக.

3. பிம்பிசார மன்னர் தனது மகத இராச்சியத்தை மேலும் விஸ்தரிக்க பல்வேறு முறைகளை கையாண்டார். அவற்றில் இரண்டினை எழுதி விளக்குக.

4. அக்பர் மன்னர் சமாதானமான நியாயமான ஆட்சி முறையை பின்பற்றிய மன்னர் ஆவார். இதை அவரின் சேவைகளூடாக விளக்குக.

8.1.மானிய முறைமை வீழ்ச்சியடைவதற்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணிகள் மூன்றினை எழுதுக.

2. மானிய முறையின் பொது அம்சங்கள் நான்கினை எழுதுக.

3.ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்கு ஏதுவாக காரணங்கள் பல, அவற்றில் இரண்டினை எழுதி விளக்குக.

4. கைத்தொழில் புரட்சியூடாக ஐரோப்பாவுக்கு கிடைத்த பொருளாதார விளைவுகள் மூன்றினை விளக்குக.

9. 1. நாடுகாண் பிரயாணங்களின் போது பின்வரும் நபர்கள் கண்டு பிடித்த இடங்களை முறையே எழுதுக.

✢ கெபோ சகோதரர்கள்

✢ பேர்டினன் மகலன்

✢ பத்தலோமியஸ் டயஸ்

2.நாடுகாண் பிரயாணங்களின் விளைவுகள் நான்கினை எழுதுக.

3.கி.பி. 1789 இல் பிரான்ஸ் புரட்சி ஏற்பட ஏதுவான காரணிகள். பல அவற்றில் இரண்டினை விளக்குக.

4.உலகில் மனித உரிமைகள் பற்றிய விழிப்பு ஏற்பட பிரான்சியப் புரட்சி பெரிதும் ஊக்கமளித்தது. இந்த கூற்றை உறுதிப்படுத்த மூன்று விடயங்களூடாக விளக் குக.

10. 1. பின்வருவனவற்றுக்கு விடை தருக.

✢ ''இந்தியாவின் உன்னத மேன்மையாளர்'' என அழைக்கப்பட்ட நபரைக் குறிப்பிடுக.

✢ இந்திய தேசிய இயக்கத்தின் தந்தையின் பெயரை குறிப்பிடுக.

✢ '' உலகமானிய '' என்ற பெயரால் கௌரவம் பெற்ற நபரைக் குறிப்பிடுக.

2. ஜப்பானில் டொக்கு காவா காலப்பகுதியில் விவசாயம் மற்றும் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றத்தை 4 விடயங்களூடாக எழுதுக.

3. சீனாவில் கலாசார புரட்சியின் பின்பு ஏற்பட்ட விளைவுகள் இரண்டினை விளக்குக.

4. முதலாம் உலக யுத்தம் ஏற்பட ஏதுவான காரணிகள் மூன்றினை எழுதி சுருக்கமாக விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னிசை நிகழ்வு

தீபாவளி தினத்தை முன்னிட்டு MOTHER SRILANKA TRUST அமைப்புடன் இணைந்து சீதுவ சகுறா இசைக்குழுவின் மாபெரும் இன்னிசை நாளை மறுதினம் 25 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு யாழ்.பொதுநூலகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள திறந்த வெளியில் இடம்பெறவுள்ளது என பலாலி ஊடக அதிகாரி மேஜர் எம்.ஏ. ஆர்.எஸ்.கே மல்லவ ஆரச்சி அறிவித்துள்ளார். (இ)

## சின்னம் சூட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தினருடைய சின்னம்சூட்டும்வைபவமும்1994 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இக் கழகத்தின் பழைய அங்கத்தவர்களை ஒன்று சேர்த்து கௌரவித்து மீண்டும் அவர்களை சமூகப் பணிக்கு இணைக்கும் வைபவமும் எதிர்வரும் மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என அக்கழகத்தின் தலைவர் எஸ்.கஜேந்திரா அறிவித்துள்ளார். (இ-3)

# நகர் சபையினால் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

(குடத்தனை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வீதிக் கருகில் பருத்தித்துறை நகர சபையினால் கொட்டப்பட்டு வருகின்ற கழிவுகளால் சூழல் மாசடைவதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முறையான கழிவகற்றல் வேலைத்திட்டத்தை கொண்டிருக்காத காரணத்தால் அப்பிரதேசம் முழுவதும் பொலித்தீன் பைகள் நிரம்பிக் காணப்படுகின்றது.

இவ்வாறான கழிவுகளால் பொதுமக்கள் சுகாதார சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள அதேவேளை துர்நாற்றம் வீசுவதால் பொது மக்கள் பல்வேறு விதமான நோய்த் தொற்றுகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக இக்கழிவுப்பொருட்கள் வெள்ளத்துடன் அடித்துச் செல்லப்பட்டு எங்கும் பரவிக் காணப்படுகின்றது.

அத்துடன் சிறுவர்கள் இவ்வாறான கழிவுகளினால் தோல் சார்ந்த நோய்களுக்கு உட்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இக்கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாவிட்டால் குறித்த பிரதேச மானது முறையற்ற சுகாதார சீர்கேட்டில் காணப்படும் என பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

டெங்குத் தொற்று போன்ற நோய்க் கிருமிகள் மக்களிடம் தொற்றக் கூடாதென சுகாதார அமைச்சினால் மக்களிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதனால் சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க மக்கள் தமது வீடுகள் மற்றும் காணிகள், தெருக்கள் என்பவற்றை சுகாதாரமான முறையில் வைத்துள்ளனர்.

இந்நிலையில் நகர சபையினால் வீதிகளில் கொட்டப்படும் கழிவுகளால் மக்களால் சீர்செய்யப்பட்ட சுகாதாரமான சூழலானது முறைகேடான சூழலாக தற்போது மாற்றப்பட்டு வருகின்றது.

இது நல்லதொரு செயற்பர்டு இல்லை என பொது மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மண் அகழ்வு காடழிப்பு போன்ற காரணங்களால் சூழல் மாசடைதலை எதிர்நோக்கியுள்ள இப்பிரதேச மக்களுக்கு இச் செயற்பாடானது மேலும் கவலையும் சுகாதார சீர்கேட்டினையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பிரதேசமானது பருத்தித்துறை நகர சபையின் நிர்வாக சபையின் எல்லைக்குள் உள் வாங்கப்பட்டது. அல்ல ஆனால் பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்டது.

இதனால் பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குறித்த பிரதேசத்தில் பருத்தித்துறை நகர சபை கழிவுப் பொருட்களை கொட்டி சூழல் மாசடைதலை ஏற்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7-20)

# ஒழுக்கமுடைய சமுதாயம் உருவாக சிந்தித்து செயலாற்றுவதே சிறந்தது

(யாழ்ப்பாணம்)

புதிய நெறிமுறையுடன் ஒழுக்கமுடைய சான்றோர் சமுதாயம் உருவாக ஆசிரியர்கள் சமய ஆன்மீக ஸ்தாபனங்கள் ஆழமாக சிந்தித்து எதிர்கால நலன் கருதி செயலாற்றுவது காலத்தின் கட்டமாகும் என இந்து கலாசார திணைக்கள அதிகாரி கலாநிதி பிரதாப் ராமானுஜம் தெரிவித்தார்.

இந்து ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இந்து கலாசார திணைக்கள பயிற்சி அரங்கில் அண்மையில் இடம் பெற்றது.

இதில் கலாநிதி பிரதாப் ராமானுஜம் ஆசி உரையினை வழங்கியிருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் இந்து என்பவன் யார்? இலக்கணம் என்ன? எவ்வாறு ஒரு இந்து உருவாகிறான்?உருவாக்கப்படுகின்றான்? குருவின் அல்லது ஆசிரிய ரின் இலட்சணம் இலக்கியம் நோக்கு என்ன? தகுதி என்ன? அவன் எதை அடைய முயல்கிறான்?

இந்த நிலையில் இந்து சமுதாயத்தின் இன்றைய நிலை என்ன?நெறிமுறை ஒழுக்கம் செய்யக்கூடியவை கூடாதவைஎன்ன? இந்து அல்லது சைவ சமுதாயம் நெறி முறையாக வழிகாட்டப்படுகிறதா? அவற்றிற்கு அறிவுறுத்தல்கள் பாடசாலை பாடவிதானங்கள் முறையாக வகுக்கப்பட்டுள்ளனவா? முறையாக ஒழுக்க நெறியுடைய தம் வாழ்வில் நெறி முறைகளை கைக்கொள்ளும் ஆசிரியர்கள் ,சான்றோர்கள் இவற்றிற்கு வழிகாட்டுகின்றார்களாஎன்ற பல கேள்வி எழுகின்றன

இதே வேளை கடந்த 50 வருடங்களாக தமிழ் இந்து சிறுவர்களை உருவாக்கவென அரசினால் வகுக்கப்பட்ட நூல்களை உருவாக்கியவர்கள் ஒழுக்க சமய நடைமுறைகளை கைக்கொண்டு ஒழுகியவர்களா? இவர்களின் வழிகாட்டலால் உருவாகிய பிரஜைகள் சமுதாயத்தில் எவ்வாறு என்ன பங்கினை அந்தஸ்தினை வகித்து எவ்வாறான நெறி முறையினை சமுதாயத்தில் உருவாக்குகிறார்கள்.

இந்து சமுதாயம் இன்றைய நிலையில் எவ்வாறு உள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதா? கூடாதா? என்ற பல்வேறு பிரச்சினைகள் பட்டியலில் இடப்பட்டுள்ளன இவற்றுக்கு தீர்வுகள் சிந்திக்கப்பட்டனவா? என்பது கேள்விக் குறியே.

மேற்படி பட்டியலில் இடப்பட்ட இடப்பட வேண்டிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு நிவர்த்திகளை முறையாக உரியவர்களிடம் அரசாங்கம், அரச உத்தியோகத்தவர்கள் கல்வி அமைச்சு ஆகியன மனித வள மேம்பாடு தொடர்புடைய நெறிமுறை வகுப்பாளர்களிடம் விவாதித்து புதிய நெறிமுறை ஒழுக்கமுடைய சான்றோர் சமுதாயம் உருவாக ஆசிரியர்கள் ,சமூக சான்றோர்கள் ,சமய ஆன்மீக ஸ்தாபனங்கள் ஆழமாக சிந்தித்து எதிர்கால நலன் கருதி செயலாற்றுவது காலத்தின் கட்டாயமும் அவசிய தேவையுமாகும் என அவர் மேலும் உரையாற்றினார் (இ-3)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (இ)

Hatton National Bank

அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை , மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை, மன்னார், வவுனியா ஆகிய கிளைகளில் 28.09.2013 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 27.10.2014 தொடக்கம் 31.10.2014 (திங்கள்- வெள்ளி) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி-8822) ஹற்றன் நஷனல் வங்கி

கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 RC<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 14 சூரிசெவ்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/ முகாமையாளர்<br>தொ.இ: B/1993 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 92 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2882 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 16 செவ் 2 இல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்: BSC, MBA/ உதவி கணக்காளர்<br>தொ.இ: B/1995 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 65 1/2 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2886 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/1996 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 49 1/2<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: B.COM, HNDA/ வங்கியாளர்<br>தொ.இ: G/2887 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 4 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/1999 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 12 1/4 .செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/2888 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில் கழிவுவாய்க்காலை கடந்து செல்ல முடியவில்லை

சந்தைக்குச் செல்வோர் அசௌகரியம்



கண்டாவளைபிரதேசசபைக்குட்பட்ட தர்மபுரம் பொதுச் சந்தையின் முன் வாயிலுக்கு செல்லும் வீதியின் குறுக்காக கழிவு வாய்க்கால் கட்டப்பட்டுள்ளது.

அந்நுழைவாயில் ஊடாக உட்பிரவேசிக்கும் வாகனங்கள் இக் கழிவு வாய்க்காலை கடந்து செல்ல முடியாது சிரமப்படுவதாக வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்ய வரும் நுகர்வோர் தமது வாகனங்களை ஏ-35 பரந்தன்-முல்லை வீதியின் ஓரத்தில் நிறுத்துவதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகின்றது.

இது தொடர்பாக தர்மபுரம் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினருக்கு மக்கள் தெரியப்படுத்தியும் இதுவரையில் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கூடிய கவனமெடுத்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் மேற்படி வாய்க்காலை அமைத்துத்தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-282)

# உதயநகர் வீதியை புனரமையுங்கள்



(முக்கொம்பன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ-9 வீதியில் இருந்து செல்லும் உதய நகர் கிரவல் வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் இது வரை காலமும் செப்பனிடப்படாது உள்ளமையால் அவ் வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகதெரிவிக்கின்றனர்.

இவ் வீதி கிளிநொச்சி பிரதேச சபைக்கு சொந்தமானதாகும். இவ் வீதியானதுஏ-9வீதியிலிருந்து மயில மரச்சந்தி வரைக்கும் (2கிலோ மீற்றர்) கிரவல் வீதியாகவே காணப்படுகிறது.

வன்னி யுத்தம் இடம்பெற்றதையடுத்து பாதையின் நடுப்பகுதியில் ஆங்காங்கே பெரிய குளங்கள் காணப்படுகின்றன. இதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியானது அம்பாள் குளம், கிருஷ்ணபுரம், விவேகானந்தா நகர், உதயநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தினந்தோறும் பயணித்து வருகின்றனர்.

அத்துடன் இவ்வீதிக்கு குறுக்காக செல்லும் புகையிரதக் கடவையானது மிக உயரமாகவுள்ளதால் அதனைக் கடந்து செல்லும் வாகனங்களின் அடிப்பகுதி சேதமடைந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்வீதியை செப்பனிட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு அமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-283)




# 296 விவசாயிகளுக்கு நாளை வாழ்வாதார உதவி

(தர்மபுரம்)

தர்மபுரம் கிழக்கு மேற்கு கமக்கார அமைப்பின் அனுசரணையுடனும் சுவதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடனும் விவசாயிகளுக்குவாழ்வாதார உதவிப்பொருட்கள் வழங்கும்நிகழ்வுநாளைவெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தர்மபுரம்கிழக்குபொதுநோக்கு மண்டபத்தில் நடை பெறும்.

இவ்வாழ்வாதார உதவிக்கென 296 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இரண்டு ஏக்கர் விதைப்பிற்கென விதை நெல்லும்அக்காணியைஉழுது பண்படுத்துவதற்கென உழவுப் பணமும் மேலும் பல உதவித் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மேலதிக உதவிகள் வழங்குவது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

இந்த வாழ்வாதார உதவி தர்மபுரம் கிழக்கு, மேற்கு பகுதிகளில் வசிக்கும் விவசாய குடும்பங்களுக்கே வழங்கப்படவுள்ளன.

இதில் ஒரு ஏக்கருக்கு BG-300 இன விதை 3 புசலும் ஒரு ஏக்கருக்கு AT-362 இன விதை நெல் 3 புசலும் ஒரு ஏக்கருக்கு BG-358 இன விதை நெல் 2 புசலும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில்செஞ்சிலுவைச் சங்க குழுவின் அதிகாரிகள், அரச அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2-282)





இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட காரியாலயத்தின் ஏற்பாட்டில் இளைஞர் விருது போட்டிகள் கடந்த 18 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதில் நடைபெற்ற நிகழ்வுகளின் ஒரு பகுதியை படங்களில் காணலாம்.(படங்கள்:-பனிக்கன் குளம் செய்தியாளர்)

# அடிப்படை வசதிகளின்றி குஞ்சுக்குள கிராம மக்கள்

## பங்குத்தந்தை சுகுனராஜ் சுட்டிக்காட்டு

(மன்னார்)

குஞ்சுக்குளம் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் எவ்வித அடிப்படை வசதிகள் இன்றிய நிலையில் பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என்று குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.சுகுனராஜ் தெரிவித்தார்.

குஞ்சுக்குளம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது,

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாதா கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய மூன்று கிராமங்களையும் உள்ளடக்கிய நிலையில் குஞ்சுக்குளம் கிராமம் உள்ளது. குறித்த மூன்று கிராமங்களையும் சேர்ந்த 350 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக இந்த மக்கள் சிறிய அளவில் விவசாயத்தை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

மழைக்காலம் என்றால் குஞ்சுக்குளம் மக்களின் போக்குவரத்துக்கள் அனைத்தும் துண்டிக்கப்படுகின்றது. இதனால் பல்வேறு அவசர தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குஞ்சுக்குளம் பிரதான வீதியில் இருந்து மாதா கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரய முறிப்பு ஆகிய மூன்று கிராமங்களுக்கும் செல்லும் வீதியின் தொடர்பு துண்டிக்கப்படுகின்றது.

குஞ்சுக்குளம் கிராம பகுதியில் வாரத்திற்கு ஒரு தடவை நடமாடும் வைத்திய சேவை மாத்திரமே இங்கு இடம்பெறுகின்றது.

அதுவும் குஞ்சுக்குளம் வீதியில் ஆறு பெருக்கெடுத்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் அந்த நடமாடும் சேவை இடம் பெற மாட்டாது.

எனவே இக்கிராம மக்களின் நலன் கருதி குறித்த மூன்று கிராமங்களையும் உள்ளடக்கிய ஒரு வைத்திய சாலையை இங்கு அமைத்துத்தருவதுடன். இப்பகுதியில் துணை வைத்தியசாலை ஒன்றை அமைப்பது இம் மக்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

குஞ்சுக்குளம் பிரதான பாலம் வடமாகாண சபையூடாக அமைக்கப்படுவது பெரியதொரு ஆசீர்வாதம் என்றுதான் கூற முடியும். தற் போது இக்கிராமத்திற்கு போக்குவரத்து சேவை நாள் ஒன்று க்கு ஒரு சேவை மாத்திரமே இடம பெறுகின்றது.

எனவே போக்குவரத்து சேவையை அதிகரிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார் (அ-2)

# அமைதியுடன் கழிந்தது நேற்றைய தீபாவளி

கிளிநொச்சி மாவட்டத்தில் தீபாவளி பண்டிகைஇம்முறை சோபையிழந்துள்ளது.

இங்குள்ள நகரப்புறங்களில் ஓரளவு பண்டிகைக்கால நிகழ்வு முன்னெடுக்கப்பட்டாலும் கிராமப்புறங்களை அண்மித்த இடங்களில் இப்பண்டிகையை ஆர்வத்துடன் மக்கள் கொண்டாடவில்லை.

வன்னி யுத்தத்தில் தமக்கான வாழ்வாதாரத்தில் பின்னடைவை எதிர்கொண்டுள்ள இம்மக்கள் தமது கையிருப்புக்களில் இருந்த பணத்தை காலபோக விவசாயத்திற்கு மூலதனமாக இட்டபோதும்எதிர்பார்த்தளவில் போதியளவு மழை பெய்யாததால் மக்கள் மனநிம்மதியின்றி இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

தற்போது இந்தியன் வீட்டுத் திட்டத்தின் ஊடாக கிடைத்த வீட்டைக்கட்டிமுடிப்பதில் கவனம் செலுத்திவருகின்றனர்.

அத்தோடு இந்த வீட்டுத் திட்ட உதவி கிடைப்பதற்கான தகுதிகள் இருந்தும் வீடு கிடைக்கப் பெறாதவர்கள் தமக்கு குடியிருப்பதற்கு வீடு கிடைக்குமா என காத்திருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய தேவைகளின் மத்தியில் எவ்வாறு பண்டிகைகளைக் கொண்டாடுவது என மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (அ-2-254)

# வினைத்திறன் மிக்க கல்வி சமூகத்தை உருவாக்குவோம்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன்

(மன்னார்)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் தமது கல்வித் தேவைகளை பாடசாலையிலேயே பூர்த்தி செய்யக் கூடிய வழியை உருவாக்குவதே கல்விச் செழுமையின் குறிக்கோளாகும் என வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் மன்னார் வலயக் கல்விப் பணிமனையில் 3ஆம் கட்டமாக நடைபெற்ற மேற்படிகல்விச்செழுமை செயற்றிட்டத்தில் முப்பது மன்னார் வலயப் பாடசாலைகள் உள்வாங்கப்பட்டன. இப்பாடசாலைகளுக்கு ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் புத்தகங்களை வழங்கிய பின் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறு கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைகளிலும் நூலகங்களை உறுதிசெய் தல் என்ற நோக்கத்தின் கீழ் கல்விச் செழுமை செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கல்விச் செழுமை என்ற பெயரில் பாடசாலை நூலக விருத்திச் செயற்பாட்டைதான் ஆரம்பித்த பொழுது முதலாம் கட்டமாக முல்லைத்தீவு வலயம், இரண்டாம் கட்டமாக துணுக்காய் வலயம், தற்போது மூன்றாம் கட்டமாக மன்னார் வலயம் என க.பொ.த சாதாரணதர உயர்தரப் பாடசாலைகளுக்கு இவ்வுதவிகளை வழங்குவதாகவும் கூறினார்.

மேலும் இவ்வுதவிகள் எதிர்காலத்தில் இன்னும் விரிவடையும் கல்விச் செழுமை மூலம் ஒவ்வொரு பாடசாலையிலும் நல்லதொரு நிறைவான நூலகம் அமைய வேண்டும்.

வறிய மாணவர்கள் தமது கல்வித்தேவைகளை பாடசாலையிலேயே பூர்த்திசெய்யக் கூடிய வழியை உருவாக்குவதே இச்செயற்றிட்டத்தின் இலக்காகும்.



வினைத்திறனான கல்விச் சமுகத்தை தமிழர்களின் ஒருங்கிணைந்தமுயற்சிமூலமே உருவாக்கமுடியும் என்ற நம்பிக்கையோடு செயற்படுத்தப்படும் இச்செயற்றிட்டத்தின் வெற்றிக்காக அனைவரும் இணைவோம்.

பாடசாலை அதிபர் ஆசிரியர்களிடம் நூல்களை வழங்கி இச்செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்டத்தை மன்னார் வலயத்தில் நிறைவு செய்திருந்தார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை நாளை என்று சோம்பேறிகள் மட்டும்தான் சொல்வார்கள். இன்றைய நாளின் அருமையை உணர்ந்தவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

*- வெஸ்லி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தூய்மையான வடக்கு மாகாணம்; உடன் ஆரம்பிக்க வேண்டிய திட்டம்

ஞானபூமி எனப் போற்றப்படுவது இந்திய தேசம். இந்திய தேசத்தில் ஓடுகின்ற புனித கங்கைகளும் கோவில் கொண்ட மலைகளும் ஞானவான்களின் ஆச்சிரமங்களும் பாரததேசத்திற்கு பேரழகையும் பேரின்பத்தையும் வழங்கலாயின.

எனினும் நூறு கோடியைக் கடந்த மக்கள் தொகையும் வறுமை நிலைமைகளும் இந்திய தேசத்தின் தூய்மைக்குப் பெரும் சவாலாயின. புனித தலங்களும் புனித தீர்த்தங்களும் கூட அசுத்தம் அடையும் அளவிலேயே இந்தியாவில் தூய்மை இருந்தது. இந் நிலையில் ''தூய்மையான இந்தியா'' என்ற கோசத்தோடு இந்திய தேசத்தை தூய்மையாக வைத்திருக்கும் ஏற்பாடுகளை பிரதமர் நரேந்திர மோடி முன்னெடுத்துள்ளார்.

இதுகாறும் ஆட்சியில் இருந்தவர்கள் கட்டாயமாகச் சிந்தித்துச் செயற்படுத்தி இருக்க வேண்டிய இந்தியாவின் தூய்மை என்ற விடயம் இதுவரை பேசப்படாத பொருளாக இருந்தமை விசித்திரமே.

எனினும் நரேந்திர மோடி அவர்கள் பிரதமராகப் பதவியேற்ற கையோடு இந்தியாவை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற சிந்தனையை வலியுறுத்தினார். அதற்காக தானே விளக்குமாறு எடுத்து நிலத்தைக் கூட்டி துப்புரவு செய்தார்.

பிரதமர் மோடியின் இந்தத் திட்டத்திற்கு இந்திய தேசம் முழுவதிலும் பூரண ஆதரவு கிடைத்து வருகிறது. தூய்மையான இந்தியா என்ற மோடியின், கனவு மிக விரைவில் நனவாகும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னெடுத்துள்ள தூய்மையான இந்தியா என்ற திட்டம் பற்றி நாமும் சிந்திப்பது பொருத்துடையதாகும். எனினும் எங்கள் நாட்டில் ஜனாதிபதி அல்லது பிரதமர் ஓர் இடத்திற்கு விஜயம் செய்கிறார் என்றவுடன் அவர் செல்லுகிற இடத்தை, செல்லும் பாதையை துப்புரவு செய்யும் வழமையே உள்ளது. ஜனாதிபதியின் வருகைக்காக வீதிகள் புனரமைக்கப்படுவதும் கட்டிடங்களுக்குவர்ணம் பூசுவதுமே வழமையாக உள்ளது. இத்தகைய ஏற்பாடுகள் இப்படித்தான் எல்லா இடங்களும் என்பது போன்ற மாயத் தோற்றத்தை நாட்டின் தலைவருக்கு காட்டுவதாக அமையும்.

உண்மையில் ஒரு நாட்டின் தலைவர் தனது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தின் சமகால நிலைமைகளை அறிய வேண்டும். அப்போதுதான் வீதிகளின் நிலைமை, எப்படி மக்கள் வாழும் வீடுகளின் தரங்கள் எத்தன்மையானவை என்பது புரியும். இதை விடுத்து ஆட்சித் தலைவரின் வருகைக்காக திருத்தப்பணிகளும் துப்புரவுப் பணிகளும் நடக்குமாயின் ஆட்சித் தலைவர் ஒவ்வொரு இடத்திற்கும் விஜயம் செய்ய வேண்டும். அதிலும் அடிக்கடி விஜயம் செய்ய வேண்டும். அப்போதுதான் தூய்மை, புனரமைப்பு என்பது எங்கள் நாட்டில் சாத்தியமாகும் என்றாகிவிடும்.

ஆனால் இந்திய தேசத்தைப் பார்த்தால் பிரதமர் மோடி மிகவும் துப்புரவு குறைந்த இடத்தைக் கூட்டி துப்புரவு செய்வதைப் பார்க்க முடியும். அதிலும் எந்த வித பந்தா படையணிகள் இல்லாமல் தனித்து நின்று தானே கூட்டித் துப்புரவு செய்து சுத்தமான இந்தியா என்ற திட்டத்தை ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.

ஆக, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள ஆட்சி வேறுபாடுகள் இதில் இருந்து புரியக் கூடியவையே. எதுவாயினும் பிரதமர் மோடி முன்னெடுத்துள்ள தூய்மையான இந்தியா என்ற திட்டத்தை வடக்கு மாகாண அரசும் நடைமுறைப்படுத்த வேண்டும். போரினால் பல்வேறு அனர்த்தங்களைச் சந்தித்த வடக்கு மாகாணம் தூய்மைப்படுத்தப்படுவது மிகமிக அவசியமாகும்.

மாதத்துக்கு ஒரு தடவை- வாரத்திற்கு ஒரு தடவை டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதையும் டெங்கு ஒழிப்பு வாரம் மேற்கொண்டதற்கு அறிக்கையும் புகைப்படமும் கேட்பதையும் விடுத்து ''தூய்மையான வடக்கு மாகாணம்'' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி அனைத்து மாகாணங்களுக்கும் முன்மாதிரியாக நம் மாகாணம் விளங்க வேண்டும். டெங்கு ஒழிப்பு என்பதை விடுத்து தூய்மையான வடக்கு மாகாணம் என்ற திட்டத்தை அமுல்படுத்தும் போது டெங்குடன் ஏனைய தொற்று நோய்களும் தடுக்கப்படும். எனவே வடக்கு மாகாண அரசு தூய்மையான வடக்கு மாகாணம் என்ற இலக்கினை நோக்கிச் செல்வதற்கு ஏற்ற ஏற்பாடுகளை செய்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# உண்மைகளை எடுத்துரைத்து உரிமை கேட்டால் பிடிப்பதில்லை

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

உண்மையை எடுத்துரைத்து நீதியைக் கேட்டாலும் உரிமையைக் கேட்டாலும் சிலருக்குப் பிடிப்பதில்லை. அதற்கு நாம் ஒன்றும் செய்யமுடியாது. அவர்களுக்குப் பிடிக்காது என்பதற்காக பொய் கூறவும் முடியாது. அவர்களுக்காக நடிக்கவும் முடியாது என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீதான தடையை நீக்கியதற்கு நான்தான் காரணமென ஒரு இணையத்தளம் செய்தியை வெளியிட்டுள்ளது. எனக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. நான் அது பற்றி கனவில்கூட நினைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயர் வண.கலாநிதி இராயப்பு யோசப்பை நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட சர்வமதக் குழுவினர் சந்தித்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்திலிருந்து வடக்கிற்கு நான்கு நாள் சமாதான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு மன்னாருக்கு வந்தமையிட்டு நன்றி கூறுகின்றேன். நல்ல சிந்தனைகள் செயற்பாடுகள் எப்போதும் நன்மையில் முடியும். அதற்கு இறைவன் பக்கபலமாக இருப்பான்.

முதலிலே இலங்கையில் புரையோடிப்போயுள்ள தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

உண்மையை எடுத்துரைத்தால் நீதியைக் கேட்டால் உரிமையைக் கேட்டால் சிலருக்குப் பிடிப்பதில்லை. அதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களுக்குப் பிடிக்காது என்பதற்காக நாம் பொய் சொல்ல முடியாது. நடிக்கவும் முடியாது.

என் மீது பொது பல சேனா குற்றம் சாட்டி வருகிறது. சில இணையத் தளங்களும் எழுதுகின்றன. அவர்களை கர்த்தர் மன்னிக்கட்டும். பிரச்சினையைத் தீர்க்க விரும்பாதோர் இன்னமும் ஈழம் என்ற பதத்தைப் பாவித்து. ஈழக் கோரிக்கையை தமிழர்களும் புலம் பெயர்ந்தவர்களும் கைவிடட்டும் என்கிறார்கள்.

நமது நாட்டில் இடம்பெற்ற கொடூர யுத்தத்தின் பின்னர் எமது மக்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக வுள்ளது.

போரிலே 19ஆயிரம் பேரைக் காணவில்லை என ஒரு அறிக்கை கூறுகின்றது. அவர்களில் பெரும்பாலானோர் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களே என்று கூறப்படுகிறது.

அதைவிட கணவனை இழந்த மற்றும் பிள்ளைகளை இழந்த குடும்பங்கள் ஏராளம். அவர்களுக்கு புனர்வாழ்வளித்து சொந்தக்காலில் வாழும் பொருட்டு வழியைக்காட்ட வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

வீதிகளும் பாலங்களும் புகையிரதமும் அவசியம்தான். அதேவேளை வயிற்றுப் பசியைப் போக்கி சுதந்திரமாக நிம்மதியாக கௌரவமாக வாழ வகை செய்ய வேண்டும்.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தை நேரடியாக அனுபவித்தவர்கள் இன்னும் அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். அவர்கள் இன்னமும் கவலையுடன் நடைப் பிணமாக அலைகிறார்கள். அவர்கள் மனங்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.

எப்படி ஒரு மனிதனை புற்றுநோய் வியாதி வாட்டுமோ அப்படி இலங்கையில் புரையோடிப் போயுள்ள தமிழர் பிரச்சினை வாட்டிக் கொண்டிருக்கிறது.

**அரசியல் தீர்வு தேவை!**

நாட்டிலுள்ள சிறுபான்மையின இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அரசியல் தீர்வு கட்டாயம் வழங்கப்பட வேண்டும். தமிழர் ஒரு தேசிய இனம். அங்கீகரிக்கப்பட்ட மொழியைப் பேசுகின்றவர்கள். அவர்களுக்கு சகல சுதந்திரங்களுடன் வாழ பூரண உரிமையுண்டு.

இது பல்லின பல்மொழி பேசுகின்ற நாடு என்பதை அரசாங்கம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். பன்மையில் ஒருமை காண வேண்டும். சிங்கள மொழி மட்டும் நாட்டின் மொழி அல்ல. அரசியல் யதார்த்தத்தை ஏற்க வேண்டும்.

அதனை அடிப்படையாக வைத்து அதிகாரப் பரவலாக்கம் இடம்பெற வேண்டும். நாடு பிளவுபடுவதை நாம் விரும்பவில்லை. யாரும் விரும்பவில்லை. ஒற்றுமையாக ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல்தான் வாழ விரும்புகின்றோம். வெறும் பேச்சளவில் அல்ல. இதயசுத்தியோடு பேச்சுவார்த்தைகள் நடந்திருந்தால் நாடு இந்தளவிற்கு சென்றிருக்காது.

சுதந்திர விடுதலை தாகத்தோடுள்ள மக்களுக்கு எவ்வித பதிலுமில்லை. சமூகத்தில் நியாயமான அடிப்படைப் பிரச்சினைகளுள்ளன. முதலில் அவைகள் தீர்க்கப்பட வேண்டும்.வேரோடு பிடுங்க வேண்டும்.

சமூகத்தில் காணப்படும் தீமைகளை உருவாக்கும் வேர்களை வேரோடு பிடுங்கியெறிய வேண்டும். அந்ததீமை ஏன் விளைகிறது என்று பார்க்க வேண்டும். அதற்கான காரணத்தையறிந்து முதலில் அதற்குத்தீர்வு காண வேண்டும். இன்றேல் பிரச்சினைகள் மீண்டும் மீண்டும் முளைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## 15 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; தந்தை உட்பட நால்வருக்கு மறியல்

அம்பாறை மாவட்டம், ஒலுவில் பிரதேசத்தில் 13 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் சிறுமியின் தந்தை உள்ளிட்ட மூவருடன், அதற்கு உடந்தையாகவிருந்த சிறுமியின் தாய் உட்பட நால்வரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதியும், நீதவான் நீதிமன்ற நீதிபதியுமான எச்.எம். முகம்மது பஸீல் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக தெரிவிக்கப்படும் சிறுமியின் தாய் முதல் திருமணம் செய்து அக் கணவரை பிரிந்து, பின்னர் இரண்டாவது திருமணம் செய்துள்ளார். அதில் முதல் திருமணத்தில் பிறந்த இச்சிறுமியின் தந்தையாலும், இரண்டாம் திருமணம் செய்து கொண்ட தாயின் கணவராலும் மற்றும் 15 வயது சிறுவன் ஒருவரினாலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்பட்டு வந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான தகவல் அறிந்த அக்கரைப்பற்று பொலிஸார் குறித்த நான்கு பேரையும் கைது செய்து கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்திய போதே நீதிபதி சந்தேக நபர்கள் நாலவரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

மேலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக சந்தேகிக்கப்படும் சிறுமி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனையின் பின்னர் சிறுவர் நன்நடத்தைப் பிரிவுக்கு மாற்றும்படியும் நீதிபதி இதன்போது கட்டளை பிறப்பித்தார். (இ)

## முன்பள்ளி சிறார்களுக்கிடையே போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மிருசுவில் பொதுநூலகத்தினர் இன்று வியாழக்கிழமை தமது எல்லைக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கிடையில் பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இப்போட்டிகளானது இன்று முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


எனவே மிருசுவில் பொது நூலகத்திற்குட்பட்ட அனைத்து முன்பள்ளி மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7-29)

## சத்திய தரிசனம்



### நல்லவரோடு பழகுங்கள்

- பிறருக்குப் பயப்படுவதும், பிறரைப் பயமுறுத்துவதும் மிருகத்தின் செயல். மன உறுதியும், அனைவரிடமும் அன்பு காட்டுவதும் தான் மனிதப்பண்பு.
- நல்ல உணவால் உடல் ஆரோக்கியம் பெறுகிறது. அது போல, நல்ல உணர்வுகளால் உள்ளம் ஆரோக்கியம் பெறுகிறது.
- நாம் நல்லவர்களாக இருப்பதோடு, நாம் பழகுகின்ற நண்பர்களும் நல்லவர்களாக இருப்பது அவசியம்.
- நேர்மை, ஒழுக்கம் இவற்றைப் புறக்கணிப்பதால் வாழ்க்கையில் வசதிவாய்ப்பு பெருகலாம். ஆனால் மனநிம்மதியை இழக்க நேரிடும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வாஸ்து சாஸ்திரம்

- வீட்டு மனையின் வடகிழக்குப் பாகத்திலிருந்து (ஈசான்யத்திலிருந்து) கடைக்கால் தோண்டி வீடு கட்ட ஆரம்பித்தால் வீடு விரைவிற் கட்டி முடிக்கப்படும்.
- தென்மேற்குப் பகுதிகளை மூலமட்டத்திற்குச் சரிசெய்வது அதிக செல்வம் கொடுக்கும்.
- வீட்டின் கிழக்கு, வடக்கு, ஈசானியம், வடமேற்கு ஆகிய திசைகளில் அதிக எடை இருக்கக்கூடாது. இருந்தால் வீட்டில் வசிப்பவருக்கு மனச்சுமை ஏற்படும்.
- ஒற்றைத்தூண் வைக்கக்கூடாது. ஒரு உத்திரம் மட்டும் வைக்கக்கூடாது.
- சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி ஆகிய மாதங்களில் வீடுகட்ட ஆரம்பிக்கலாம்.
- படுக்கையறையுடன் இணைந்த குளியல் மற்றும் கழிவு அறையாக இருந்தாலும் படுக்கையறையின் வடமேற்கிலேயே அமையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையால் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில், யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மோதிக்கொண்டது.

இப்போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை வெற்றி கொண்டது.

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை 56 புள்ளிகளையும் சென்ஜோன்ஸ் கல்லூரி 49 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது.

நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி மோதிக்கொண்டது இப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 46 புள்ளிகளையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி 43 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. ( க)

# வதிரி பொம்மர்ஸ் வெற்றி



சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது வதிரி பொம்மர்ஸ்விளையாட்டுக்கழக அணி.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக ம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மாவிளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. முதற் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மிகவும் உற்சாகத்தோடு மோதிக் கொண்டதால் ஆட்டம் விறு விறுப்பான கட்டத்தினை அடைந்தது.

இதன் போது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் வைகுந்தன் தனக்கு கிடைத்த பந்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கானமுதலாவதுகோலை அடித்தார் பதிலுக்கு தமது அணிக்கான கோலினை அடிக்க சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி கடுமையாக போராடியது. ஆனால் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை.. முதற் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில்முன்னிலைவகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி ஆட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு களம் இறங்கியது. எதிர் அணியின் தடுப்பாட்டத்தால் அனைத்து முயற்சிகளும், அவர்களின் மாற்றங்களும் தவிடுபொடியாகின. ஆட்டத்தின் 33ஆவது 40ஆவது நிமிடங்களில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியினருக்கு மேலும் இரு கோல்கள் கிடைத்தன.

ஆட்ட நேர முடிவில் வதிரி பொம்மர்ஸ் விளையர்ட்டுக் கழக அணி 3:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# பதக்கம் மறுத்த சரிதாவுக்கு போட்டியில் பங்கேற்க தடை



ஆசிய விளையாட்டில் பெண்களுக்கான குத்துச்சண்டையில் லைட்வெயிட் பிரிவின் (57-60 கிலோ) அரை இறுதியில் அனுபவம் வாய்ந்த இந்தியாவின் சரிதா தேவியும், தென்கொரியாவின் ஜினா பார்க்கும் மோதினர். இப்போட்டியில் சிறப்பாக செயற்பட்ட போதிலும் துரதிர்ஷ்டவசமாக 0-3 என்ற கணக்கில் சரிதா தேவி வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது. இந்த ஆட்டத்தில் நடுவர்களின் அதிகபட்ச கருணை உள்ளூர் வாசி மீது விழுந்தது. இதனையடுத்து தனக்கு அநீதி இழைக்கப்பட்டதை நினைத்து வேதனை தாங்காமல் சரிதா தேவி கண்ணீர் விட்டு கதறி அழுதார்.

பின்னர் சரிதா தேவி பதக்கத்தை ஏற்க மறுத்துவிட்டார். பதக்கம் அளிக்கப்பட்ட அரங்கில் தொடர்ந்து அழுத வண்ணமே இருந்த சரிதா தேவி தனது பதக்கத்தையும் கொரிய வீராங்கனையிடமே கொடுத்தார். பதக்கம் உரிய அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது. இந்த சம்பவம் அங்கு இருந்தவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக சரிதா குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் சரிதா தேவி குத்துச்சண்டை போட்டிகளில் பங்கேற்க தற்காலிக தடை விதிப்பதாக சர்வதேச குத்துச்சண்டை சங்கம் அறிவித்துள்ளது. இதனால் உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டிகளில் சரிதா பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க)

# கேரள பிளாஸ்டர்ஸ்சை வென்றது சென்னை எப்.சி.அணி

சென்னையில் நடைபெற்ற ஐ.எஸ்.எல். காற்பந்து போட்டியில் சென்னையின் எப்.சி. அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தியன் சூப்பர் லீக் காற்பந்து தொடரில் சென்னை நேரு விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், சென்னையின் எப்.சி. அணியும், கேரள பிளாஸ்டர்ஸ் அணியும் விளையாடின. ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் கிடைத்த பனால்டி வாய்ப்பில் சென்னை அணியின் இலனோ கோல் அடித்தார். இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் சென்னை அணி 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் கேரள வீரர்கள் சமன் செய்யும் முயற்சியில் கடுமையாக முன்னேறினர். இதன் பலனாக 50ஆவது நிமிடத்தில் அந்த அணியின் ஹியூம் கோல் அடித்து 1-1 என சமன் செய்தார். அதன்பின்பு முரட்டுத்தனமான ஆட்டத்தில் இரு தரப்பினரும் ஈடுபட்டதால் சில வீரர்கள் காயமடைந்தனர்.

பரபரப்பான ஆட்டத்தின் 63 ஆவது நிமிடத்தில் சென்னையின் பெர்னாட் மெண்டே அசத்தலான ஒரு கோல் அடிக்க கடைசியில் சென்னை அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதன்மூலம் சென்னை அணி விளையாடியுள்ள 2 போட்டிகளிலும் வெற்றிபெற்று, மொத்தம் 6 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# மேற்கிந்திய தீவுகளுடன் எதிர்கால ஆட்டங்களை இடைநிறுத்த பிசிசிஐ முடிவு



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியுடன் இந்தியா எதிர்காலத்தில் விளையாடவிருந்த இருதரப்பு கிரிக்கெட் தொடர் போட்டிகள் அனைத்தையும் இடைநிறுத்துவதாக இந்திய கிரிக்கெட் கட்டுபபாட்டு வாரியமான பிசிசிஐ தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் விளையாடிவந்த மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி தொடரை பாதியிலேயே ரத்து செய்துவிட்டது சம்பந்தமாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பிசிசிஐ செயற்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தீர்மானித்துள்ளனர்.

பார்வையாளர் அரங்க டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்த நிலையில், மூன்று டெஸ்ட் ஆட்டங்கள், ஒரு ஒரு நாள் ஆட்டம், ஒரு இருபது ஓவர் ஆட்டம் ஆகியவை ரத்தாக பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளதாக கூறும் பிசிசிஐ அதிர்ச்சியும் ஆத்திரமும் தெரிவித்திருந்தது.

தொடர் ரத்தானது சம்பந்தமாய் தமது அடுத்தகட்ட நடவடிக்கைகளை தீர்மானிப்பதற்காக சக்திமிக்க பிசிசிஐ செயற்குழு செவ்வாயன்று கூடியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் இந்தியா விளையாடக்கூடிய கிரிக்கெட் தொடர்கள் அனைத்தையும் இடைநிறுத்துவதாகவும், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதென்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தீர்மானித் [illegible]

மேற்கிந்தியத் தீவுகள் தொடரைப் பாதியிலேயே ரத்து செய்வதாக அறிவித்த நிலையில், குறைந்த கால அவகாசத்தில் இந்தியாவில் வந்து விளையாட சம்மதம் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் வாரியத்துக்கு பிசிசிஐ நன்றி தெரிவித்துள்ளது.

நவம்பர் 2ஆம் திகதி தொடங்கி ஐந்து ஒருநாள் ஆட்டங்களை இலங்கை அணி இந்தியாவில் விளையாடவுள்ளது.

இந்த ஐந்து ஒருநாள் ஆட்டங்களுக்கான இடங்களாக கட்டாக், ஐதராபாத், ராஞ்சி, கொல்கத்தா மற்றும் அகமதாபாத் ஆகிய நகரங்கள் தேர்வாகியுள்ளன. போட்டியின் திகதிகளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது.


இலங்கையில் எதிர்ப்புக் குரல்கள் இந்தியா வந்து விளையாட இலங்கை கிரிக்கெட் வாரியம் சட்டென சம்மதம் தெரிவித்திருப்பதற்கு இலங்கையில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன.

2015 உலகக் கோப்பைக்காக இலங்கை அணி தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள சூழ்நிலையில், இந்த அவசர ஏற்பாட்டில் நடக்கும் இந்தியத் தொடரில் விளையாட இலங்கை சம்மதம் தெரிவித்திருப்பது புதிய பயிற்சியாளர் அத்தபத்து செய்திருந்த ஏற்பாடுகளை குலைப்பதாக உள்ளது என பிபிசியிடம் பேசியிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க கூறினார்.

இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் முடிவு இலங்கையில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கான நோக்கத்திலானதாகத் தெரிய வில்லை. மாறாக பிசிசிஐயை திருப்திப்படுத்துவதற்கான முடிவாகவே தெரிகிறது என அர்ஜுன ரணதுங்க கூறினார்.

இதனிடையே, மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான கிரிக்கெட் தொடர்கள் இடை நிறுத்தப்பட்டாலும், இந்திய பிரிமியர் லீக் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளில் மேற்கிந்திய வீரர்கள் பங்கேற்பது அனுமதிக்கப்படவே செய்யும் என ஐபிஎல் தலைவரான ரஞ்சிப் பிஸ்வால் தெளிவுபடுத்தியுள்ளார். (க)

# கோலி தலைமையில் களமிறங்கும் இந்திய அணி



இலங்கை அணிக்கு எதிராக ஒருநாள் தொடரில் களமிறங்கும் இந்திய அணி வீரர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகளுக்கு பதிலாக இந்தியா சுற்றுப்பயணம் செல்லும் இலங்கை அணி நவம்பர் மாதம் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இந்த தொடரில் இந்திய அணித்தலைவர் டோனிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு பதிலாக மீண்டும் பார்முக்கு திரும்பியுள்ள கோலி அணித்தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். டோனிக்கு பதிலாக விருத்திமான் சாகா, விக்கெட் கீப்பராக களம் காண்பார்.

ஓய்வில் இருந்த சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் அணிக்கு திரும்பியுள்ள நிலையில், இளம் சுழல்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ், ஒரு போட்டியிலும் இதுவரை விளையாட வாய்ப்பு கிடைக்காத நிலையில் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டுள்ளார்.

**இந்திய அணி விபரம்**

விராட் கோலி, ஷிகர் தவான், அஜிங்யா ரஹானே, சுரேஷ்ரெய்னா, அம்பட்டி ராயுடு, விருத்திமான் சாகா, அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, முகமது ஷமி, உமேஷ் யாதவ், இஷாந்த் ஷர்மா, அமித் மிஸ்ரா, முரளி விஜய், வருண் ஆரோன், அக்ஷர் பட்டேல். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூனிஸ்கான் சதம்

# பாகிஸ்தான் சிறந்த ஆரம்பம்


ஆஸியின் வேகப் புயல்களான மிட்சல் ஜோன்சன், பீற்றர் சிடில் ஆகியோரின் வேகத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் 3.1 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாற ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு, யூனிஸ் கானின் அபார சதம் புத்துயிர் அளிக்க நேற்றைய முதல்நாள் நிறைவில் பாகிஸ்தான் அணி ஸ்திரமான நிலையை அடைந்தது.


ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள அவுஸ் திரேலிய அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் போட்டி நேற்று டுபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, தனது ஆரம்ப விக்கெட்டுக்களான அகமட் செஸாட் (03), மொஹமட் ஹபீஸ் (0) ஆகியோரை ஆஸியின் பீற்றர் சிடில், மிட்சல் ஜோன்சனின் பந்துகளுக்கு இரையாக்கியது.





எனினும் 3-வது விக்கெட்டுக்காக இணைந்த அசார் அலி - யூனிஸ் கான் இணை ஆஸியின் பந்துகளை சிறப்பாக எதிர்கொண்டதன் காரணமாக பாகிஸ்தான் அணி சரிவிலிருந்து மீண்டது.

சிறப்பாக ஆடிய இவ்இணை தமக்கிடையில் 108 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தது.

இந்நிலையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த அசார் அலி அணியின் ஓட்ட எண்ணிக்கை 115 ஐ தொட்டபோது 53 ஓட்டங்களில் ஜோன்சனின் பந்தில் டூலனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இவரின் ஆட்டமிழப்பை தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் களத்தில் நின்ற யூனிஸ் கானுக்கு ஒத்துழைப்பு வழங்க, யூனிஸ் கான் டெஸ்ட் போட்டிகளில் தனது 25-வது சதத்தை பூர்த்தி செய்தார்.

எனினும் அவர் அணியின் ஓட்ட எண்ணிக்கை 198 ஐ எட்டியபோது 106 ஓட்டங்களுடன் ஜோன்சனின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

தொடர்ந்து அசாட் சபீக் களமிறங்க, நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களை எடுத்தது.

களத்தில் மிஸ்பா 34, சபீக் 09 ஓட்டங் களுடன் உள்ளனர். பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் மிட்சல் ஜோன்சன் 3, பீற்றர் சிடில் ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

போட்டியின் 2-வது நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## இரு வாகனங்கள் மோதி விபத்து

கிளிநொச்சி நகரில் நேற்று காலை இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இராணுவத்திற்கு சொந்தமான 2 வாகனங்கள் விபத்துக்குள்ளானதாக கிளிநொச்சி பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பரந்தனிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த ஜீப் வண்டியும் பிரதான வீதியால் பயணிக்க முற்பட்ட மற்றுமொரு வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து ஏ9 வீதியில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-11)

## பயணக் கட்டுப்பாடு அமுலிலிருக்கும்

வட பகுதிக்கு செல்வதற்காக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காலவரையறையற்றவை என இராணுவ பேச்சாளர் ருவான் வணிக சூரிய தெரிவித்தார்.

இது அவசர அவசரமாக எடுக்கப்பட்ட முடிவல்ல வட பகுதி நிலைவரம் குறித்த குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை ஆராய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டுமென்ற நடைமுறை வட பகுதியின் தற்போதைய நிலையை கவனமாக ஆராய்ந்த பின்னரே எடுக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின்றி செல்லும் வெளிநாட்டவர்கள் ஓமந்தையில் திருப்பி அனுப்பப்படுவாகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய தற்போதை விடயங்களை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது குறித்து ஊடகங்களுக்கு தெரிவிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ள்ார். (எ-11)

## விஜய் ரசிகர்கள் நேற்று திரையரங்கின் முன் ஆரவாரம்



தமிழின் முன்னணி நடிகர்களில் ஒருவரான இளையதளபதி விஜய் கதாநாயகனாக நடிக்கும் கத்தி திரைப்படம் பல எதிர்ப்புக்களின் மத்தியில் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.

நேற்றையதினம் அதிகாலை முதலே குறித்த படத்தினை பார்ப்பதற்கு திரையரங்கில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் கூடியிருந்தனர்.

திரையரங்கு எங்கும் வாழைகள் தோரணங்கள், பட்டாசுவெடி என தாள ஆரவாரங்களுடன் நேற்றைய தினம் கத்தி படம் வெளியானது.

யாழ்ப்பாண திரையரங்கில் விஜய்யின் பிரம்மாண்டமான விளம்பர பதாகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

இதற்கான விஜய்யின் இரசிகர்கள் பலர் பால் குடம் ஊற்றி வழிபாடு செய்தனர்.

தீபாவளி தினமான நேற்று விஜய்யின் படத்தினைப் பார்ப்பதற்கு பல இடங்களில் இருந்தும் இரசிகர்கள் யாழ்.மாவட்டத்திற்கு படை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மல்லாகம் வைரவர் ஆலயத்தில் நேற்று மிருக பலி நிறுத்தப்பட்டது

(மல்லாகம்)

மல்லாகம் நரியிட்டான் வைரவர் ஆலயத்தில் இடம்பெறவிருந்த மிருக பலி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சைவ மகா சபையும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் பயனாக இந்த வேள்வி நிறுத்தப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்படாத காரணத்தால் இந்த வேள்வியை நடத்துவதற்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதனால் ஆலயத்தில் பலியிடுவதற்காக கொண்டுவரப்பட்ட 25 இற்கு மேற்பட்ட ஆடுகள் திருப்பிக்கொண்டு செல்லப்பட்டன. மேற்படி ஆலயத்தில் வருடாந்தம் தீபாவளி தினத்தன்று மிருக பலியிடுதல் நடைபெற்று வந்தது.

ஆனால், இவ்வருடம் ஆலயத்தில் மிருக பலி நடத்துவதற்கு சனசமூக நிலையம் ஒன்று எதிர்ப்பை வெளியிட்டது. இது தொடர்பில் சனசமூக நிலையத்தால் வலி.வடக்கு பிரதேச சபை மற்றும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டது. இந்த நிலையில் ஆடுகள் வெட்டுவதாயின் சட்டரீதியான வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவித்த தெல்லிப்பழை பொலிஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் ஆடுகள் பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படாமல் ஆடுகளை வெட்ட அனுமதி வழங்க முடியாது என்றும் தெரிவித்தனர். மீறி ஆடுகளை வெட்டினால் வெட்டுபவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸார் எச்சரித்தனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி...

ஏற்கிறீர்களா என்று ஹெல உறுமய தலைவர் ஓமல்பே சோபித தேரர் ஜனாதிபதியிடம் வினவிய போது, அவர் அதை நிராகரிப்பதாகக் கூறி எழுந்து சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதி தமது கட்சியினர் யோசனைகள் தொடர்பில் 5 நாள் காலக்கெடு விதித்திருப்பதாகவும், அதற்குள் பதிலளிப்பதாகவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் சுசில் பிரேம் ஜெயந்த, டலஸ அழகப்பெரும, பசில் ராஜபக்ஷ ஆகியோரும் இச் சந்திப்பில் பங்கேற்றனர். (எ-11)

# புலிகளின்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரியளவிலான சொத்துக்களை பெற்றுக்கொள்ளக் கூடிய சட்ட ரீதியான உரிமை முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனுக்கு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே பல பில்லியன் அமெரிக்க டொலர பெறுமதியான சொத்துக்களை கைப்பற்றிக் கொள்வதே அரசாங்கத்தின் முயற்சி எனவும், இதன் காரணமாகவே புலிகள் மீதான தடை நீக்கப்படுவதனை அரசாங்கம் தடுக்க முயற்சிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் திட்டமிட்ட அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீக்கம் குறித்த வழக்கு விசாரணைகளில் ஆஜராகவில்லை.

புலிகளுக்கு எதிரான தடை முற்றாக நீக்கப்பட்டால் பெருமளவு பணமும் சொத்துக்களும் கிடைக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)


## பதவி வெற்றிடம்

குழந்தை பராமரிப்பாளர் (பெண்) பதவிக்கு ஆட்கள் தேவை. விண்ணப்பிக்க அல்லது மேலதிக விபரங்களுக்கு;

10A, வைமன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0213202545, 0778841375

## D.C.M

யாழ்.நகர்

A/L 2016

புதிய பிரிவு ஆரம்பம்
பொருளியல் : S.ஜெயக்குமார்
கணக்கீடு : P.பகீரதன்
(C-8830)

25.10.2014 சனி
காலை 10 மணிக்கு

## அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற

55000 பேருக்கான வாய்ப்பு, இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
2015 இல் A/L எழுதப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்

உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்

அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்

கிளிநொச்சி
A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால்
0771516537

யாழ்ப்பாணம்
49A ஸ்டான்லி வீதி - பொது நூலகம் முன்னால்
0773867257

நெல்லியடி
முடக்காட்டுச்சந்தி
0776699892

வல்வெட்டித்துறை
யாழ்வீதி - வல்வெட்டி
0776697960

குறைந்த கட்டணத்தில் V2 Travels and Tours (Pvt) Ltd (8130)
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு துரிதபொதிகள் சேவை


# இலங்கை...

பெற்றுக்கொள்ளும் முகமாகவே இந்த விஜயம் இடம்பெறவுள்ளது.

இந்தநிலையில் தமிழக மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இந்திய அரசாங்கம் செயற்படுகிறது என்று நாம் தமிழர் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதற்கிடையில் இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்திக் கொள்ள இந்தியா முயற்சிப்பது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினால் போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு நாட்டுடன் இந்தியா எவ்வாறு பாதுகாப்பு உடன்படிக்கையை மேற்கொள்ள முடியும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)

# முன்னாள்...

தூய்மையான நாளை என்ற அமைப்புடன் எந்த தொடர்பும் கிடையாது.

திடீரென தூக்கத்தில் எழுந்ததனைப் போன்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் செயற்பட்டு வருகின்றார்.

எவ்வாறெனினும் ஜாதிக ஹெல உறுமயவும் தமது கட்சியும் ஒரே விதமான கொள்கைகளை பின்பற்றுகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படும் வரையில் நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்யக் கூடாது என தெரிவித்துள்ளார். (எ-11)

# புலிகள் மீது...

உறுப்பினரான ரோசி சேனாநாயக்க வழிமொழிந்துள்ளார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனையை ஏற்க முடியாது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். (எ-11)

# இலங்கைக்கு...

நிசாமுடனும் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார். இந்தியா, இலங்கைக்கு இரண்டு கடலோர கண்காணிப்பு படகுகளையும் ஆயுத தளபாடங்களையும் வழங்கவுள்ளது.

கடந்த காலங்களில் இந்தியா 24 எல்-70 துப்பாக்கிகள், ராடர்கள், நிலக்கண்ணி வெடியிலிருந்து பாதுகாப்பளிக்கக் கூடிய வாகனங்கள் போன்றவற்றை வழங்கியுள்ளதுடன் 800 முதல் 900 இலங்கை படையினருக்கு பயிற்சியையும் வழங்கி வருகின்றது.

இதேபோன்று மாலைதீவுக்குக் ஹெலிகொப்டர்களையும் ஏனைய தளபாடங்களையும் வழங்கிவருகின்றது. சமீப காலங்களில் சீனாவுடன் இந்த இரு நாடுகளும் தமது உறவை பலப்படுத்தியுள்ளதும் அதன் புதிய கடலோர பட்டுப் பாதை திட்டத்திற்கு ஆதரவை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது என இந்திய நாளிதழ் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-11)


## நெல்லியடியில்... SAAMSON

Experts in English Training

இலவசம்
● 20 புத்தகங்கள்
● VIDEO DVD
● பயிற்சிக்கட்டணம்
~~5500.00~~
3000.00

இவையனைத்தும் 25.10.2014 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு மட்டுமே

ஆங்கிலமொழிப் பயிற்சியில் முன்னணியில் திகழும் SAAMSON தற்போது நெல்லியடியில் தனது வகுப்புகளை ஆரம்பிக்கிறது.

சனி,ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம்: 25.10.2014
1. மாலை : 3.00 மணி (சனி)

திங்கள்,புதன் பயிற்சிநெறி ஆரம்பம்: 27.10.2014
1. மாலை : 3.00 மணி (திங்கள்)

இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர் இளைஞர், யுவதிகள் இணைந்துகொள்ளமுடியும்

இன்றிலிருந்து பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

(C-8831)
SAAMSON
Experts in English Training

24, இலங்கை வங்கி அருகில்,
நெல்லியடி சந்தி.

021 320 3313
077 621 4567


# கையெழுத்துப் போராட்ட பிரதி பிரி. பிரதமர் அலுவலகத்தில்!

(கொழும்பு)

ஈழத்தமிழர்களுக்கு பரிகார நீதி கோரி, பிரித்தானியப் பிரதமர் அலுவலகம் முன், முள்ளிவாய்க்கால் தமிழீழத் தேசிய துக்க நாள் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தில் தொடங்கப்பட்ட கையெழுத்துப் போராட்ட பிரதி, முறையாக பிரித்தானிய பிரதமர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளையோர் மற்றும் பண்பாட்டு விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இக் கையெழுத்துப் சேகரிப்பு பிரதியில், நில அபகரிப்பு - ஆட்கடத்தல் சிங்களக் குடியேற்றம் உட்பட பல்வேறு வடிவங்கள் ஈழத் தமிழினத்தின் மீது தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பினை தடுத்து நிறுத்தக் கோரியும், அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு பொதுசன வாக்கெடுப்பு நடத்தக் கோரியும் உள்ளடக்கப்பட்டிருந்ததது.

இதேவேளை பிரித்தானியாவில் இருந்து தமிழர்களை நாடுகடத்த வேண்டாம் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

கடந்த மே 12-ம் திகதி முதல் சேகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளின் முதற் தொகுதியினை இளையோர் மற்றும் பண்பாட்டு விவகாரங்களுக்கான துணை அமைச்சர் நிமலன் சீவரட்ணம் தலைமையில் இளையோர்கள் கையளித்திருந்தனர்.

இந்நாளில் பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன் அடையாள ரீதியான கவனயீர்ப்பு ஒன்றுகூடல் ஒன்றினையும் மேற்கொண்டிருந்தனர். (எ-11)

# ரணிலுக்கு ஆதரவாக களத்தில் பொன்சேகா

(கொழும்பு)

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்துள்ளார்.

முன்னதாக சரத் பொன்சேகாவின் குடியுரிமை பறிக்கப்பட்டு, வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ள விடயத்தை அனுதாப அலைகளாக மாற்றி, அனோமா பொன்சேகாவை களமிறக்க திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்டுள்ள வன்முறை கலாசாரத்தின் மத்தியில் அனோமா பொன்சேகா தாக்குப் பிடிப்பது சாத்தியமில்லை என்பது சரத் பொன் சேகாவின் கட்சி முக்கியஸ்தர்களின் கருத்தாக உள்ளது.

இதனையடுத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிப்பதற்கும், அவரது வெற்றிக்காக பாடுபடவும் சரத் பொன்சேகா தீர்மானித்துள்ளார்.

இதற்கான அறிவிப்பு இன்னும் ஓரிரு நாட்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

# கனடா நாடாளுமன்றின் உள்ளே துப்பாக்கிச் சூடு!

(ஒன்ராரியோ)

கனேடிய நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று புதன்கிழமை கனேடிய நேரப்படி காலை 9.52 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஒட்டாவாவில் உள்ள யுத்த நினைவகம் அமைந்துள்ள பகுதியிலிருந்து நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு பின்னர் அரச கட்டடங்களை நோக்கியும் துப்பாக்கிபிரயோகம் செய்துகொண்டு தப்பியோடியுள்ளார்.

இதன்போது கனேடிய இராணுவத்தினர் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளன.

இதேவேளை பதில்தாக்குதலின்போது துப்பாக்கிதாரி கொல்லப்பட்டுள்ளார் என்றும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் வெளியாகியுள்ளன.

தாக்குதல் நேரத்தில் நாடாளுமன்றத்துக்குள் பிரதமர் இருந்தார் என்றும், அவர் பாதுகாப்பாகவே உள்ளார் என்றும் இராணுவத்தரப்பு அறிவித்துள்ளது. கனடா, தனது பாதுகாப்பை அதிகரித்து சில மணிநேரங்களில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சாராயம் விற்றவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் அரச சாராயம் விற்பனை செயதனர் என்ற சந்தேகத்தில் இருவரை தாம் கைதுசெய்தனர் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து தலா 175 மில்லிலீற்றர் கொண்ட அரச சாராயப் போத்தல்கள் ஐந்தும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சிவில் உடையில் சென்று சாராயம் வாங்குவது போல் பாசாங்கு செய்த பொலிஸார், இருவரையும் கையும் மெய்யுமாகக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை தாம் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வாதரவத்தை பெரிய பொக்கணை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாடு வெட்டிய ஒருவரையும் தாம் கைதுசெய்துள்ளனர் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை குறித்த இடத்துக்கு சென்றபோது மாடுவெட்டிக் கொணடிருந்த மூவரில் இருவர் தப்பியோடி விட்டனர என்றும், ஒருவர் கைதானார் என்றும், சந்தேக நபரிடம் இருந்து 10 கிலோ இறைச்சியும கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-11)

# வெளிவிவகா...

சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2009 நவம்பர் 05ஆம் திகதியே இக்கொந்தராத்து வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் அமைச்சர் பீரிஸ், 2009 நவம்பர் 15ஆம் திகதியே ஷேனுகா ஜெனிவா பதவியைப் பொறுப்பேற்றதாக பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# பெலாரஸ் பிரதிநிதிகள் நவம்பரில் வருகை

பெலாரஸ் நாட்டின் தேசிய சபையின் பிரதிநிதிகள் எதிர்வரும் நவம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பெலாரஸ் நாடாளுமன்றத்தின் தலைவர் விளாடிமிர் அன்ட்ரெய் சென்கோ தலைமையிலான குழுவே நவம்பர் 17முதல் 21 ஆம் திகதிவரை இலங்கைக்கு வரவுள்ளது.

இதன்போது இலங்கையின் நிர்வாக முறை மற்றும் நாடாளுமன்ற அமர்வுகளை அந்த பிரதிநிதிகள் குழு பார்வையிடவுள்ளது. அத்துடன் பல்வேறு தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளது. (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org